விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கணக்கீடு பாலகஜன் (SLTS)
A/L 2026
(தமிழ் & ஆங்கில மொழி மூலம்)
077 452 0043
யாழ்.நகரின் முன்னணி ஆசிரியரின்
பிரத்தியேக வகுப்பு ஆரம்பம்
KBK → கொழும்புத்துறை → கந்தர்மடம்
Zoom இன் ஊடாக இலங்கை பூராகவும்
(C-0466)
A/L 2024 & Day, A/L 2025 பிரிவுகளுக்கான புதிய வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
யாழ்.நகரில் தொடர்ச்சியாக முன்னணி பெறுபேறுகளை வழங்கிவரும் ஆசிரியரிடம் கற்பதற்கான வாய்ப்பு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 162 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 16 புதன்கிழமை (29.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வடக்கு - தெற்கு வேறுபாடின்றி
# அனைவருக்கும் காணி உரிமம் வழங்க நடவடிக்கை
## அமைச்சர் மனுஷ நாணயக்கார



(கொழும்பு)

வடக்கு, தெற்கு வேறுபாடின்றி அனைவருக்கும் காணி உரிமம் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.எஸ்.ஐ.எஸ் உடன் தொடர்பு சகோதரர்கள் இருவர் கைது

(கொழும்பு)

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் 15

## நெல்லியடியில் பிரபல குடு வியாபாரி கைது

(கரணவாய்)

வடமராட்சியின் பிரபல குடு வியாபாரி ஒருவர் நெல்லியடிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட் 15

## ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட காணிக்குள் மக்கள் பிரவேசிக்கத் தடை
### கண்ணிவெடி அபாயம் என ஆளுநர் செயலகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.83 ஏக்கர் காணிக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கு தற்காலிக தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி குறிப்பில், விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் சுமார் 55 ஆயிரம் சதுர அடி காணியில் கண்ணிவெடிகள் காணப்படக்கூடும் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தால் உரிய 15

## உணவுப் பொதிக்குள் மட்டத்தேள்
## யாழ்.திருநெல்வேலியில் உணவகம் ஒன்றுக்கு சீல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் உணவு பொதிக்குள் மட்டத்தேள் ஒன்று காணப்பட்டதாக, கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படை 15

## இளம் குடும்பப் பெண் முல்லையில் படுகொலை
### கணவன், இரு பெண்கள் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் இளம் குடும்பப் பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அவரது கணவன் மற்றும் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூதன் வயல் கிராமத்தில் 02

## போராட்டம் மூலமே எமக்கான தீர்வுகளைப் பெற வேண்டும்
### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

போராட்டம் மூலமே எமக்கான தீர்வுகளை நாம் பெற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் 02

## பாடசாலை விடுதியில் கொடூரத் தாக்குதல்
### 11 மாணவிகள் பொலிஸில் தஞ்சம்
### தீவக பாடசாலையொன்றில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தீவகம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலையொன்றின் விடுதியில் கிறிஸ்தவ அருட்சகோதரி ஒருவரின் கொடூரத் தாக்குதலை தாங்க முடியாமல், அங்கு தங்கியிருந்த 11 15

## 80 போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியாவில் 80 போதை மாத்திரைகளுடன் 20 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா குருமன்காடு பகுதியில் மாவட்ட போதை ஒழிப்பு பிரிவு 15

## இந்திய உயர்ஸ்தானிகர் மகிந்தவுடன் கலந்துரையாடல்



02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நயப்பும் பாராட்டு விழாவும்



**திருமதி இராசமலர் நடராசா**

(B.A, P.G.D.E, SLTS - I)

**சேவை விபரம்**

யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
17.08.1988 – 31.04.1992
யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை
01.05.1992 – 06.09.2011
யா/வரணி மத்திய கல்லூரி
07.09.2011 – 01.01.2019
யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை
02.01.2019 – 03.01.2024

Best Wishes!


04.01.2024 இல் ஓய்வுபெற்றுச் செல்லும் தமிழ்ப் பாட ஆசிரியர் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

(C-0478)

**பாடசாலைச் சமூகம்**
**யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை**



## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியை திருமதி **கலைவாணி அருட்செல்வன்** அவர்களின் அன்பு மாமனார்

**கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


(1012)

பிரிவுத் துயருடன்...
**சேவையாளர் சங்கம்,**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**



## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 1935 - 11 - 28 | 2024 - 05 - 28 |



### திரு. பழனி பிரசாத் ஐயா (பிச்சை)

வித்தியாபுரம், ஒட்டுசுட்டானை வதிவிடமாகக் கொண்ட திரு. பழனி பிரசாத் ஐயா(பிச்சை) அவர்கள் 28.05.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி - மல்லிஅம்மை தம்பதிகளின் அன்பு மகனும் பார்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கமரன் - லக்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் தங்கத்துரை(வித்தியாபுரம்), சுசிலா(VC றோட், ஒட்டுசுட்டான்), காலஞ்சென்ற அன்பரசு மற்றும் இராசதுரை (அன்பரசன் புத்தகசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி(கண்மணி), செல்வகுமாரி(சாந்தி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்திரகுமார் சத்தியவாணி, சுசிதரன் இராஜேஸ்வரி, ஆரோக்கியராஜ் மேகலா, ஜோன்சன் அன்பரசி, மதியரசன், நிதியரசன், கலையரசி, ருஜிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் கம்ஷா, கர்ஸ்ணவி, சேபிதன், ரஸ்மிகா, சுவீட்சா, முவின்சன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29.05.2024) புதன்கிழமை மதியம் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்டையர்மலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்
(அன்பரசன் புத்தகசாலை)

(C-0481)


# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் யாழ் வணிகர் கழகம் பூரண ஆதரவு

தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான மக்கள், சமூக அமைப்புகளுடனான உரையாடலின் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் மாலை யாழ் வணிகர் கழகத்துடனான சந்திப்பொன்று நடைபெற்றது.

பொதுவேட்பாளர் விடயத்தில் தொடர்ச்சியான செயற்பாட்டில் இருக்கும் சமூக (சிவில்) அமைப்புகளின் கூட்டிணைவு சார்பாக கலந்துகொண்ட பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம், சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கும் யாழ் வணிகர் கழகத்தின் தலைவர் செயலாளர் உட்பட்ட முக்கிய உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் யாழ் வணிகர் கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான நோக்கம் அதன் முக்கியத்துவம் தொடர்பாக விரிவாக பேசப்பட்டிருக்கிறது.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே பொது வேட்பாளரின் அவசியத்தை முன்னிறுத்தி அது விரைவாகவும் வீரியமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டை வர்த்தக சங்கத்தினர் முன்வைத்தனர். இது பொதுவேட்பாளர் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியிலும் சமூக நிறுவனங்கள் மத்தியிலும் தன்னியல்பாக தோன்றியுள்ளமையின் வெளிப்பாடு என சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும் இச்சந்திப்பில் பொதுவேட்பாளர் முன்னெடுப்பில் தொடர்ச்சியாக இயங்கி வரும் சிவில் சமூக அமைப்புகளின் கூட்டிணைவில் யாழ் வர்த்தக சங்கமும் இணைந்து செயற்படுவதை உறுதிப்படுத்தினர். இது தொடர்பான தமது அறிக்கையை முன்வைப்பதாகவும் ஊடகங்கள் ஊடாக தமது உடன்பாட்டையும் இதன் அவசியத்தையும் வெளிப்படுத்தி தொடர்ந்து இக்கோரிக்கையை வலுப்படுத்துவதில் பங்காற்றுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தின் முக்கியத்துவம் கருதி வேறு பல சமூக நலன் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் செயற்படும் அமைப்புகளும் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# தொழிலாளர் சட்டங்களினை மாற்றம் செய்ய வேண்டாம்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

புதிய தொழிலாளர் சட்டத்திற்கான தற்போதைய முன்மொழிவுகளை நிறுத்துமாறு சர்வதேச மன்னிப்புச்சபை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முறையான ஆலோசனைக்குப் பிறகே தொழிலாளர் சட்டங்களில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று அமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

சர்வதேச தரம் மற்றும் உரிமைகளை அகற்றுவதன் மூலம் தொழிலாளர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை பலவீனப்படுத்தும் உத்தேச புதிய சீர்திருத்தங்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது. (ம-7,10)

## போராட்டம்...

இதனை தெரிவித்த அவர்,

தமிழர்களுக்கு என ஒரு தனித்துவமான இனம், அவர்களுக்கே உரித்தான மொழி, வணக்க பண்பாட்டு முறைகள் உள்ளன.

ஆனால், இலங்கை அரசு, இங்குள்ள படைகள் மூலம், சிங்கள அடையாளங்களையும் சிங்கள பண்பாட்டு முறைகளையும் தமிழர் பிரதேசத்திற்குள் திணிக்க முயல்வதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எமது இனத்திற்கு இதுவும் ஒரு சாபக்கேடு என தெரிவித்த சிறீதரன், நாம் போராடுகின்ற இனமாக இருந்தால் சில விடயங்களை எதிர்க்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

நாங்களும் சில விடயங்களை போராட்டம் மற்றும் செயற்பாடுகள் மூலமே முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ம-7,10)

## இந்திய...

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பானது விஜேராம மாவத்தையில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்திப்புக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. பேசப்பட்ட விடயங்கள் குறித்தும் அறிவிக்கப்படவில்லை. (ம-7,10)

## இளம்...

இடம்பெற்றுள்ளது.

பூதன் வயல் கிராமத்தினை சேர்ந்த இளைஞனை வவுனியா - ஆசிகுளம் பகுதியினை சேர்ந்த 23 வயதுடைய இளம் பெண் திருமணம் செய்து 7 மாதங்களாக வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் இரு நாட்களுக்கு முன் குறித்த பெண் கிணற்றில் விழுந்து இறந்துள்ளதாக முறைப்பாடு செய்வதற்காக கணவன் பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

இதன்போது பொலிஸார் வருகை தரமுன்னர் அயலவர்கள் கிணற்றில் விழுந்த பெண்ணை மீட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இருப்பினும் பெண் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ள நிலையில், நேற்று முன்தினம் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசேதனைக்கு உட்படுத்தப்பட்டபோது குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளதான சந்தேகம் எழுந்துள்ளது.

இதனையடுத்து முள்ளியவளை பொலிஸாரால் உயிரிழந்த பெண்ணின் கணவர் மற்றும் கணவருடன் வாழ்ந்து வந்த நெடுங்கேணியினை சேர்ந்த இரண்டு பெண்கள் என மூவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.5 மில்லியன் இலங்கையர்கள் புகைப்பழக்கத்திற்கு அடிமை

## மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்

**(கொழும்பு) உலகில் புகைப்பழக்கம் குறைந்துவரும் நாடுகளில் இலங்கையின் நிலை சிறந்த நிலையில் காணப் பட்ட போதிலும் 1.5 மில்லியன் இலங்கையர்கள் புகைப்பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**



தற்போது புகைப்பழக்கத்திலிருந்து விடுதலையாகி வரும் எமது நாட்டின் இளைஞர்களை மீண்டும் அதற்குள் ஈர்த்துக் கொள்வதற்காக பல்வேறு முயற்சிகள் நடைபெறுவதாகவும் குறித்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இளைஞர்களையும் சிறுவர்களையும் புகைப்பழக்கத்திற்கு தூண்டும் வகையில் சட்டவிரோதமான மற்றும் நெறிமுறையற்ற தந்திரோபாயங்களை புகையிலை நிறுவனம் மேற்கொள்வதாகவும் இதன் போது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணி இருந்தும் இலங்கையில் புகைப்பழக்கம் பாரியளவில் குறைந்துள்ளதாகவும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இலங்கையில் புகைப்பழக்கத்தை கட்டுப்படுத்த பல்வேறு ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



## குறையும் வட்டி விகிதங்கள்

### மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு

(கொழும்பு)

சந்தை வட்டி விகிதங்களைக் குறைப்பதற்கு மேலும் வாய்ப்புகள் இருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இதனை தெரிவித்தார்

சந்தை வாடிக்கையாளர்களுக்கு நிதி நிறுவனங்கள் வெகுவிரைவில் குறைப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்

இதேவேளை நிதி நிறுவனங்கள் அந்த பெறுமதிகளைக் குறைத்துள்ள போதிலும், இலங்கை மத்திய வங்கியின் அளவு குறைக்கப்படவில்லை என தெரிவித்தார்.

மேலும் புதிதாக வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதம் குறைய வேண்டும். தற்போது வழங்கப்பட்ட கடன்களில் செய்ய வேண்டிய மாற்றம் முன்கூட்டியே நடக்கிறது.

அதை நாங்கள் கண்காணித்து வருகிறோம். புதிய கடன் வழங்குவதற்கான வாய்ப்புகளையும் நாங்கள் காண்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

---

## இன்புளுவன்ஸா பரவும் அபாயம்

## அறிகுறிகள் தென்பட்டால் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்

### பெற்றோர்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையால் இன்புளுவன்ஸா வைரஸ் பரவும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்நாட்களில் சிறுவர்கள் இடையே இன்புளுவன்ஸா ஏ மற்றும் பி வைரஸ் தொற்றுகள் பதிவாகி வருவதாகவும் அவர்களில் இன்புளுவன்ஸா ஏ தொற்றுக்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தகவலை கொழும்பு ரிட்ஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், காய்ச்சலுடன் இருமல், சளி, தலைவலி, உடல்வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால், அது வைரஸ் காய்ச்சலாக இருக்கலாம்.

இதுபோன்ற அறிகுறிகள் இருந்தால் பிள்ளைகளை பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம்.

மேலும் குளிர் காலத்தில் இன்புளுவன்ஸா வைரஸ் பரவும் எனவும் வைரஸ் பரவாமல் தடுக்க முகக்கவசங்களை பயன்படுத்துவது மிகவும் அவசியம் எனவும் வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

இன்புளுவன்ஸா வைரஸ் என்பதால் தடுப்பூசிகள் இல்லை எனவும் பரசிட்டமோல் மருந்தை உள்ளெடுத்து தண்ணீர் மற்றும் இயற்கையான திரவங்களை எடுத்துக் கொண்டு ஓய்வு எடுக்க வேண்டும் எனவும் விசேட வைத்தியநிபுணர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள்

### ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு மேலும் நீடிக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினதும் பாராளுமன்றினதும் பதவிக் காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதன் மூலம் நாட்டை பாதுகாக்க முடியும் என்பதுடனள் அதுவே சரியான சந்தர்ப்பமாகும்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஏனைய கொடையாளர்களுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

அத்துடன், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டியது அனைத்து விடயங்களையும் விட முக்கியமானது.

மேலும், ஜனநாயக ரீதியில் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## எரிபொருள் விலை குறைவடையலாம்

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு வலுவடைந்து வருவதால் எரிபொருள் விலை குறையும் என தெரியவந்துள்ளது .

எரிபொருள் விலை மாதாந்த திருத்தம் எதிர்வரும் 31ஆம் திகதி நள்ளிரவு மேற்கொள்ளப்பட உள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இருப்புக்கள் இருப்பதால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

நீண்ட விடுமுறை வார இறுதி காரணமாக எரிபொருள் பாவனை அதிகரித்துள்ளதாக பெற்றோலியம் பிரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொவிட் பரவியதன் பின்னர் இவ்வருடம் வெசாக் காலத்தில் அதிக எரிபொருள் நுகர்வு இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் கிரிக்கெட் கொடி பறக்குமா? பேஸ்போல் சவாலைச் சமாளிக்குமா?

உலக கிண்ண தொடர் மூலம், அமெரிக்காவில் கிரிக்கெட் வளர்ச்சி உச்சத்தைத் தொடலாம்.

வெஸ்ட் இண்டீஸ், அமெரிக்காவில் "ரி20" உலகக்கிண்ணத் தொடர் (ஜூன் 2-29) நடக்க உள்ளது.




இதில் 55 போட்டிகள் வெஸ்ட் இண்டீஸ் மண்ணிலும் 16 போட்டிகள் அமெரிக்காவின் நியூயோர்க், டல்லாஸ், லாடர்ஹில் நகரங்களிலும் நடக்க உள்ளன. இந்தியா-பாகிஸ்தான் மோதும் போட்டி ஜூன் 9இல் நியூயோர்க்கில் நடக்கிறது.

**ஒற்றுமை அதிகம்**

கடந்த 1800களில் அமெரிக்க மக்கள் கிரிக்கெட் விளையாடினர். 1844ல் நியூயோர்க்கில் அமெரிக்கா, கனடா மோதிய போட்டி நடந்து. 1869 களில் "அதிவேகமான" பேஸ்போல் வரவுக்கு பின் கிரிக்கெட் மோகம் குறைந்தது. கிரிக்கெட்டுக்கும் பேஸ்போல் விளையாட்டுக்கும் ஒற்றுமை அதிகம். இரண்டிலும் பேட், பந்து உண்டு. ஓட்டம் எடுக்க ஓட வேண்டும். தற்போது அமெரிக்க ரசிகர்கள் பேஸ்போல் மீது அதிக ஆர்வமாக உள்ளனர். இதை சமாளித்து கிரிக்கெட் முன்னேற்றம் காண வேண்டும்.

**ஐ.சி.சி., முயற்சி**

"ரி20" உலகக்கிண்ணத் தொடரின் மூலம் அமெரிக்காவில் கிரிக்கெட் மறுமலர்ச்சியை ஏற்படுத்த ஐ.சி.சி., முயற்சிக்கிறது. சமீபத்தில் மியாமியில் நடந்த "போர்முலா - 1" பந்தயத்தில் உலக கிண்ணத் தொடரை விளம்பரம் செய்தது. தொடரின் விளம்பர தூதராக ஜமைக்காவின் "மின்னல் வேக" வீரர் உசைன் போல்ட்டை நியமித்துள்ளது.

போல்ட் கூறுகையில்,"கிரிக்கெட் பற்றி அறிய அமெரிக்க மக்கள் ஆர்வமாக உள்ளனர். இங்கு கிரிக்கெட் நன்கு வளர்ச்சி அடையும்," என்றார்.




அமெரிக்க கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் வேணு பிசிகே கூறுகையில், "உலகக்கிண்ணத் தொடருக்காக நிறைய விளம்பரம் செய்கின்றனர். இதன் காரணமாக அமெரிக்காவில் கிரிக்கெட் பிரபலமடையும். லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் (2028) "ரி20" போட்டி இடம் பெற இருப்பது சாதகமான விடயம்," என்றார்.

**வளமான வாழ்க்கை**


உலகக் கிண்ணத் தொடருக்கான அமெரிக்க அணியில், பகுதி நேர வீரர்கள் தான் இடம்பெற்றுள்ளனர். "ஸ்பின்னர்" நிசார்க் படேல், மருந்து ஆய்வு நிறுவனத்தில் முழுநேர ஊழியராக உள்ளார். இவர் கூறுகையில்,

"அமெரிக்காவில் பேஸ்போல், என்.எப்.எல் கால்பந்து, என்.பி.ஏ., கூடைப்பந்து என நிறைய விளையாட்டுகள் உள்ளன. ஒலிம்பிக் பதக்கத்தால் கட்டமைக்கப்பட்ட நாடாக திகழ்கிறது. வளமான வாழ்க்கை கிடைக்கும் என்பதை உறுதி செய்தால், கிரிக்கெட்டை அதிகம் பேர் தேர்வு செய்வர்," என்றார்.

**கோலி தாமதம்**

உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இந்திய அணித் தலைவர் ரோகித் சர்மா, பும்ரா, சூர்யகுமார் உள்ளிட்ட முதல் குழுவினர் நியூயோர்க் சென்றனர். அனுபவ கோலி சற்று தாமதமாக செல்ல உள்ளார். இதற்காக பி.சி.சி.ஐ.,யிடம் சிறப்பு அனுமதி கேட்டுள்ளார். இவர் இந்த மாத கடைசியில் நியூயார்க் செல்ல திட்டமிட்டிருக்கிறார். வரும் ஜூன் 1ல் நடக்க உள்ள வங்கதேசத்திற்கு எதிரான பயிற்சி போட்டிக்கு முன் சென்று விடுவார். இதே போல துணைத் தலைவர் ஹர்திக் பாண்ட்யாவும் முதல் குழுவினருடன் செல்லவில்லை. மும்பை அணியின் தலைமைப் பதவியில் விமர்சிக்கப்பட்ட இவருக்கு தனிப்பட்ட வாழ்க்கையிலும் பிரச்சினை. இதனால் லண்டனில் சிறிது காலம் ஓய்வு எடுத்தார். இங்கிருந்து நேரடியாக நியூயோர்க் செல்லவுள்ளார்.

# நடையைக் கட்டினார் நடால் பிரெஞ்ச் ஓபனில் அதிர்ச்சித் தோல்வி



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ஸ்பெயினின் நடால் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ஸ்பெயினின் ரபெல் நடால், ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் மோதினர்.

இத்தொடரில் 14 முறை கிண்ணம் வென்ற நடால் எளிதில் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. முதல் செட்டை 3-6 என இழந்த நடால், "டை பிரேக்கர்" வரை சென்ற 2ஆவது செட்டை 6-7 எனக் கோட்டை விட்டார். தொடர்ந்து ஏமாற்றிய இவர், 3ஆவது செட்டை 3-6 என பறிகொடுத்தார். முடிவில் நடால் 3-6, 6-7. 3-6 என்ற கணக்கில் தோல்வியடைந்து முதன் முறையாக இத்தொடரில் முதல் சுற்றோடு திரும்பினார். கடந்த 2016ல், 3ஆவது சுற்றோடு திரும்பியது இத்தொட ரில் நடாலின் மோசமான செயற்பாடு.

மற்றொரு போட்டியில் இத்தாலியின் ஜானிக் சின்னர், கிரீசின் ஸ்டெபானஸ் டிசிட்சிபாஸ் 7-6, 6-4, 6-1 என ஹங்கேரியின் மார்டன் புக்சோவிக்சை தோற்கடித்தார். மற்றைய முதல் சுற்றுப் போட்டிகளில் அமெரிக்காவின் பென் ஷெல்டன், கனடாவின் பெலிக்ஸ் அகுர்-அலியாசிம் உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.



**ஸ்வியாடெக் வெற்றி**

பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் "நடப்பு சம்பியன்" போலந்தின் இகா ஸ்வியாடெக், பிரான்சின் லியோலியா ஜீன்ஜீன் மோதினர். அபாரமாக ஆடிய உலகின் "நம்பர்-1" ஸ்வியா டெக் 6-1, 6-2 என்ற நேர் செட் கணக்கில் மிகச்சுலபமாக வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில் துனிசியாவின் ஆன்ஸ் ஜபீர 6-3, 6-2 என அமெரிக்காவின் சச்சியா விக்தேரியை வீழ்த்தினார். மற்ற முதல் சுற்றுப் போட்டிகளில் செக் குடியரசின் மார்கெடா வான்ட்ரூசோவா, இத்தாலியின் ஜாஸ்மின் பவுலினி, ரஷ்யாவின் லியுட்மிலா சாம் சோனோவா, அனஸ்டாசியா பொடபோவா உள்ளிட்டோர் சாதித்தனர்.

# கிண்ணம் வென்றது மே.தீவுகள் தென்னாபிரிக்காவுக்கு வெள்ளையடிப்பு



மூன்றாவது "ரி20" போட்டியில் அசத்திய மே.தீவுகள் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் 3-0 தொடரை கைப்பற்றி கிண்ணத்தைச் சுவீகரித்தது

மே.தீவுகள் சென்ற தென்னாபிரிக்க அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்றது.

முதலிரண்டு போட்டியில் வென்ற மே.தீவுகள் ஏற்கெனவே தொடரை கைப்பற்றியது. இந்நிலையில் 3ஆவது போட்டி கிங்ஸ் டனில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னா பிரிக்க அணிக்கு குயின்ரன் டி கொக் (19) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். அணித் தலைவர் வான் டெர் துசென் (51), வியான் முல்டர் (36) ஓரளவு கைகொடுக்க, 20 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய மே.தீவு கள் அணிக்கு அணித் தலைவர் பிரண்டன் கிங் (44), ஜோன்சன் சார்ள்ஸ் (69) நம்பிக்கை அளித்தனர்.

13.5 ஓவர்களில் மே.தீவுகள் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. மேயர்ஸ் (ஒ), அலிக் அதானஸ் (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்டநாயகன் விருதை சார்ள்ஸ் வென்றார். தொடர் நாயகன் விருதை மே.தீவுகளின் குடகேஷ் (8 விக்.,) கைப்பற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருவண்ணை கனனாதிட்டி காளி அம்பாள் தேவஸ்தான திரிதள இராஜகோபுர கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா விஞ்ஞாபனம் எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.38 மணி தொடக்கம் 11.20 மணி வரையுள்ள சுப வேளையில் திரிதள இராஜ கோபுர கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது. (நி-6-33)


லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (898)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பனை வெல்லம், பாணி விற்பனை

இயற்கை வளமும், மருத்துவ குணமும் கொண்ட சுத்தமான முறையில் தரமாக தயாரிக்கப்பட்ட பனை வெல்லம், பனம் பாணி என்பன நியாயமான விலையில் கொள்வனவு செய்யலாம். உள்நாட்டு வெளிநாட்டு பாவனைக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு: சுன்னாகம், ப.தெ.வ.அ.கூ.சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

தொ.இல: 021 224 0022, 021 224 0024, 077 104 2116


காரியாலய கடமை நேரம்: காலை 8.15- மாலை 4.30 வரை.

பொது முகாமையாளர்,
சுன்னாகம், ப.தெ.வ.அ.கூ.சங்கம்,


## கண்ணீர் அஞ்சலி

அமரர். சின்னத்தம்பி ஜெயரூபன்

(பிரதி அதிபர் மற்றும் தமிழ்பாட ஆசிரியர் யா/வீமன்காமன் மகா வித்தியாலயம்)



19.05.2024 அன்று எம்மை விட்டுப் பிரிந்து சென்ற தமிழ் ஆசானின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். (1006)

தமிழ் பாட ஆசிரியர்கள்,
வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 - 05 - 1945



இறப்பு 23 - 05 - 2024

### திருமதி.றோக் அருளானந்தம் புஸ்பம்மா

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கடற்கரை வீதி புனித ஆரோக்கிய நாதர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட றோக் அருளானந்தம் புஸ்பம்மா அவர்கள் கடந்த (23.05.2024) வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தியாஸ்-செபமாலை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளப்பு செல்லையா-அக்னேஸ் ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான றோக் அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவரான குணாறெமிங்டன் மற்றும் எட்மன் பேர்க் (வெஸ்லி - அமெரிக்கா), றொசாஜினி (ரஜிதா-பிரான்ஸ்), ஜெலாஜினி (விஜிதா-அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), டினேஸ் ராஜ் (சாரதி -MOH வேலணை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்ரனி நிக்சன் (பிரான்ஸ்), றோகினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் றொஸ்கா, கிலியோ, ஒலிவியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, அருட்சகோதரி மேரி மெற்றில்டா, பிலிப்பு, அலேஸ், றோசம்மா மற்றும் வரவணிக்கம் (சித்தா-புதுக்குடியிருப்பு), சின்னப்பு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அமலதாஸ், அன்ரன், குலியேல் (நவம்), இராயப்பு, தங்கமலர், இராசமலர், மரியாம்பிள்ளை, சலமோன் மற்றும் சாள்ஸ் (அமெரிக்கா), யோனாஸ் (அமெரிக்கா), ராஜேஸ்வரி (லண்டன்), சேவியர் (கொத்தலா), பரமேஸ்வரி (பிரான்ஸ்), குலேந்திரன் (லண்டன்), அக்னேஸ் (மனோன் -கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.05.2024) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்.தூய மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி காலை 10.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

Live address: Https://Youtube.com/@cudartv4267?si=FUYJYNrZLEEuAGzO
Cudartv

விலாசம்- இல.107/3,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (1005)

தகவல்: குடும்பத்தினர்
ஜெலாஜினி - 077 935 3126
டினேஸ் ராஜ் - 076 677 8126
021 222 6931

## இராசிபலன்

29.05.2024
வைகாசி 16, புதன்கிழமை,
சஷ்டி பிற்பகல் 1.27 மணிவரை,

திருவோணம் முற்பகல் 8.41 மணிவரை,
சுபநேரம் 4.22-5.52 மணிவரை,
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை,

சந்திராஷ்டமம் - மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** குறைவாகப் பேசினாலும் குறை கூறாமல் இருப்பது நல்லது, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கடகம்:** குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வீர்கள், முன்னேற்றம் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், எண்ணியது நிறைவேறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** நன்மைகள் நடைபெறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் வாய்ப்புண்டு.

**கன்னி:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், ஆனந்தமான நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**கும்பம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**மீனம்:** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமானவர்களில் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

தன்னுடைய குறிக்கோலில் வெற்றி பெற்றவன் உலகத்தையே வென்றவனாகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா வைத்தியசாலைக்குள் மதுபோதையில் நுழைந்த நபர் அடாவடி

## கேள்வி கேட்ட ஊழியர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் மதுபோதையில் மோட்டார் சைக்கிளுடன் உள்நுழைந்தவரை கேள்வி கேட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்திய சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் வைத்தியசாலை உத்தியோகத்தர் படுகாயமடைந்ததுடன் தாக்குதல் நடத்தியவர் கைது செய்யப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

வாள்வெட்டுக்கு இலக்காகி காயமடைந்த ஒருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றியவாறு மதுபோதையில் வந்த நபரொருவர் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்குள்ளே நுழைந்து சிகிச்சையளிக்க கோரியுள்ளார்.


இதன்போது ஏன் மோட்டார் வண்டியில் உள்ளே வந்தீர்கள் என கேட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர் மீது மதுபோதையில் வந்த நபர், அலுவலக மேசை மீது இருந்த அச்சு இயந்திரத்தால் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து அங்கு ஒன்றுகூடிய வைத்தியசாலை ஊழியர்கள் குறித்த நபரை பிடித்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

காயமடைந்த வைத்தியசாலை உத்தியோகத்தர் மற்றும் வாள்வெட்டில் காயமடைந்தவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த சம்பவம் வைத்தியசாலை ஊழியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக வைத்தியசாலைக்குள் நுழைந்து குழப்பத்தில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்லும் நிலையில், இது தொடர்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்த வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளனர். (நி-33)



யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 25 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 20ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (படங்கள்: சிவசாந்தன்)

# வாகன இலக்கத்தகடுகள் மக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக் கத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் https://dmta ppointments. dmt. gov.lk என்ற மாவட்ட செயலக இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்கத் தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்காக தங்கள் கைத் தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன் புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப்பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற் குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக் கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்தள்ளார். (நி)

# யோகக்கலை கற்கைநெறி நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக் கலை அடிப்படை கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணி வரை நடைபெறும் இவ் வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயில விரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 180 | 250 | 180-220 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 70 | 130 | 80-100 | 150 |
| தக்காளி | 280 | 200 | 200 | 150-200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 150 | 100-120 | 200 |
| கோவா | 250 | 250 | 200 | 220 | 250 |
| கரட் | 250 | 300 | 300 | 230 | 300 |
| பூசணி | 100 | 80 | 110 | 80-100 | 100 |
| புடோல் | 180 | 300 | 180 | 130 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 70-90 | 160 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 250-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 220 | 200 | 250 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 300 | 700 |
| வெண்டைக்காய் | 180 | 200 | 100 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 150 | 120 | 80 | 150-250 | 100 |
| லீக்ஸ் | 300 | 400 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 420 | 300 | 600 | 350 | 500 |
| கறிமிளகாய் | 200 | 350 | 250 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 | 500-800 | 800 |
| போஞ்சி | 600 | 750 | 600 | 380 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | 160 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 100 | 60-80 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1200 | 900-1100 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 100 | 80 | 50-90 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 600 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 650 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | -- | 200 | 80 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 60 | 200 | 80 | 70 | 80 |
| ஈரப்பலா | 120 | -- | 120 | 80 | -- |

# குறுங்கால கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் நடத்தப்படவுள்ள குறுங்கால கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மின்னியலாளர், அலுமினிய உருவமைத்தல் பயிற்சி, கனிய அளவை உதவியாளர், கணணி வலை யமைப்புத் தொழில் நுட்பவி யலாளர், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் பழுதுபார்த்தல், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர் மற் றும் தையல் பயிற்சி ஆகிய கற்கைகளுக்கே விண்ணப் பங்கள் கேரப்பட்டுள்ளன.

இக்கற்கை முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

ஆறுமாதங்களைக் கொண்ட இக்கற்கையினை பயில்வோருக்கு மாதாந்தம் 4 ஆயிரம் ரூபாய் வரையான ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ள தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் மேல திக தகவல்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக 021 222 0028 அல்லது 021 221 2402 ஆகிய தொலைபேசியூடாக அல்லது இலக்கம் 4 பிறவுண் வீதி, யாழ்ப் பாணம் என்ற முகவரிக்கு நேரடியாக சமூகமளித்துப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக் கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ரயில் அபிவிருத்திப் பணிகள் மீண்டும் தாமதம்-பந்துல



(கொழும்பு)
வடக்கு ரயில்வேயின் அபிவிருத்திப் பணிகளை எதிர்வரும் பொசன் பௌர்ணமி தின விடுமுறைக்கு முன்னர் பூர்த்தி செய்ய முடியாது என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு ரயில்வேயின் அபிவிருத்திப் பணிகளை ஓகஸ்ட் மாதத்திற்குள் முடிக்க முடியும்.

இதேவேளை, பொசன் விடுமுறையை முன்னிட்டு விசேட பேருந்து சேவையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பொசன் பௌர்ணமி தினத்திற்கு முந்திய நாளிலும், பொசன் போயா தினங்களிலும் பேருந்து சேவைகள் இடம் பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த விசேட பேருந்து சேவைக்காக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் துறையுடன் இணைந்து விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கால அட்டவணை எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

# சம்பள முரண்பாடுகள் ஆராய விசேட குழு

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)
அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச சேவையின் பல துறைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், உடனடி தீர்வுகளை வழங்குமாறு ஜனாதிபதி அமைச்சரவைக்கு பரிந்துரைத்துள்ளார்.

இதன்படி ஒவ்வொரு துறையிலும் நிலவும் சம்பள முரண்பாடுகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை பரிந்துரைப்பதற்கு குழுவொன்றை நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளதுடன், பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் அடங்கிய குறித்த குழுவை விரைவில் நியமிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# 27 ஆவது நாளாகத் தொடரும்

## பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டம்

(கொழும்பு)
பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் முன்னெடுத்துள்ள பணிபகிஷ்கரிப்புப் போராட்டம் 27 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பளம் 15 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளமை, கல்விசாரா ஊழியர்களின் மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை ஆகிய செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் 17 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் 17 உயர் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இலங்கையின் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ளக மற்றும் வெளிவாரியாக கல்வி கற்கும் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கனரக வாகனம்-ஆட்டோ சாவகச்சேரியில் விபத்து

## நால்வர் படுகாயம்



(சாவகச்சேரி)
கனரகவாகனத்துடன் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்.சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு அருகாமையில் A9 வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.45 மணியளவில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

கனரக வாகனம் பின்னால் திரும்ப முற்பட்டவேளையில் அதன் பின்பாக வந்த முச்சக்கரவண்டி அதனுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி மற்றும் அதில் பயணித்த மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-30-33)

# 'கடலலைகளை மேவிய கதை' நாவல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
விசுவமடுவில் அலெக்ஸ் பரந்தாமனின் "கடலலைகளை மேவிய கதை" நாவல் அறிமுக நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் விசுவமடுவில் அமைந்துள்ள மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் கலாபூஷணம் ந. இராமநாதன் (கோகுலன்) தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 29 உயரம் : 5'9"<br>தகைமை/தொழில்: Health &Physical Education, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14546 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bsc, Teacher<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Teacher<br>தொ.இ: G/14590 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம் :பூரட்டாதி<br>கி.பா: 35 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்-QS,Msc,Engineer (London)<br>எதிர்பார்ப்பு: Engineer, IT Field, other graduates<br>தொ.இ: B/14547 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Network Telecom Engineer (London)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14593 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 05<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Bsc(QS),TO<br>எதிர்பார்ப்பு: Bsc graduate, IT தொடர்பானவர்கள்<br>தொ.இ: B/14551 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 67<br>தகைமை/தொழில்: BA (following)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/14596 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா- 28<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: Electician<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14552 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா: 06<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் :Network System, Engineer<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம். வெளிநாடு(Australia, Canada)<br>தொ.இ: G/14599 |

கல்யாணமாலை
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாறைகள் சரிந்து விழுந்து 15 பேர் உயிரிழப்பு

(டில்லி)

மிசோரம் மாநிலம், ஐஸ்வாலில் உள்ள கல்குவாரியொன்றில் பாறைகள் சரிந்து விழுந்ததில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரெமல் புயல் காரணமாக ஐஸ்வால் மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாகவே குறித்த கல்குவாரியில் இருந்து பாறைகள் சரிந்து விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த விபத்தில் பலர் காயமடைந்துள்ளனர் எனவும், இது குறித்து மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (நி)

## மாயி திரைப்பட இயக்குநர் சூர்யபிரகாஷ் காலமானார்



(சென்னை)

தமிழ் சினிமாவின் பிரபல இயக்குநர் சூர்யபிரகாஷ் மாரடைப்பால் நேற்று காலமானார். இவர் தனது 55 ஆவது வயதில் காலமானாதாக தெரிவிக்கப்படுகின்றது.

சரத்குமார் இயக்கத்தில் வெளியான மாயி, திவான் போன்ற படங்களை சூர்ய பிரகாஷ் இயக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இயக்குநர் சூர்யபிரகாஷின் மறைவுக்கு சினிமா பிரபலங்கள் இரசிகர்கள் எனப் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (நி)

## செயற்கைக் கோள் மூ

## கொரிய தீபகற்பத்தில்

## அயல் நாடுக

(பியாங்யாங்)


வட கொரியா, தென் கொரியா நா காரணமாக கொரிய தீபகற்பத்தில் ெ நிலவி வருகிறது.

ஐ.நா. மற்றும் உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வட கொரியா ஏவுகணை சோதனைகள் மற்றும் போர் ஒத்திகை போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

தென் கொரியாவைக் கண்காணிக்கும் வகையில் கடந்த நவம்பர் மாதம் வட கொரியா தனது முதல் இராணுவ உளவு செயற்கைக் கோளை பூமியின் சுற்றுப் பாதைக்கு அனுப்பியது.

இந்நிலையில், அடுத்த வாரமும் ஒரு செயற்கைக் கோளை அனுப்ப உள்ளதாக வடகொரியா நேற்று அறிவித்துள்ளது.

5 ஆண்டுகளுக்கு பின்னர், தென் கொரியா ஜனாதிபதி யூன் சுக் இயோல் மற்றும் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா மற்றும் சீனப் பிரதமர் லி கியாங்கை ஆகியோர் சியோலில் சந்தித்து முத்தரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட



போதே, வடகொரியா இந்த அற

## அமெரிக்காவை பந்தாடிய புயல்

- குழந்தைகள் உட்பட 18 பேர் பலி
- சுமார் 100 பேர் படுகாயம்
- மின் துண்டிப்பால் 5 லட்சம் பேர் இருளில் மூழ்கி தவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மத்திய பகுதியில் சக்திவாய்ந்த புயல் தாக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி டெக்சாஸ், ஒக்லஹோமா, ஆர்கன்சாஸ் ஆகிய மாகாணங்களை புயல் பந்தாடியது.

அப்போது வெளியில் நின்று கொண்டிருந்த பல கார்களை புயல் கவிழ்த்து போட்டது. மேலும் அங்குள்ள ஏராளமான வீடுகளும் சேதம் அடைந்தன. இந்த கட்டட இடிபாடுகளில் பலர் சிக்கிக்கொண்டனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த மீட்புப் படையினர் மீட்கும் பணியில் இறங்கினர். அப்போது கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவத்தில் பச்சிளம் குழந்தைகள் உட்பட 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 100 இற்கும் மேற்பட்டோருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பலர் கட்டட இடிபாடுகளில் சிக்கி இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே அவர்களை மீட்கும் பணியில் மீட்பு படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே புயல் காரணமாக அங்கு ஏராளமான மரங்கள், மின்கம்பங்களும் முறிந்து விழுந்தன. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

எனவே சுமார் 5 லட்சம் பேர் இருளில் மூழ்கி தவித்தனர். இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை முற்றி

## வாகனங்கள் மீது

## 10 பேர் உயிரிழப்பு,

## துருக்கியில் துய



(அங்காரா)

தெற்கு துருக்கியில் அதிவேக வீதியில் பயணிகள் பேருந்து ஒன்று வாகனங்கள் மீது மோதி விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்துள்ளதோடு 39 பேர் நாட னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூலம் கண்காணிப்பு

# ல் தொடரும் பதற்றம்

## கள் கண்டனம்

ா நாடுகளுக்கிடையிலான மோதல்
தில் தொடர்ந்தும் பதற்றமான சூழல்



த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வடகொரியாவின் வட மேற்கிலுள்ள டோங்சங்கிரி ஏவுதளத்தில் உளவு செயற்கைக்கோளை ஏவுவதற்கான சந்தேகத்திற்குரிய செயற்பாடுகளின் அறிகுறிகளைக் கண்டறிந்ததாக தென் கொரிய இராணுவம் சமீபத்தில் தெரிவித்திருந்தது.

வட கொரியாவின் இந்த திட்டத்திற்கு அண்டை நாடுகளான தென் கொரியா மற்றும் ஜப்பான் தரப்பில் இருந்து கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலிஸ்டிக் ஏவுகணை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி செயற்கைக்கோளை ஏவுவது, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை நேரடியாக மீறும் செயல் என்றும், இது பிராந்தியம் மற்றும் உலகின் அமைதியையும் பாதுகாப்பையும் சீர்குலைக்கும் என்றும் நேற்று நடந்த முத்தரப்பு சந்திப்பின்போது தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் தெரிவித்துள்ளார். (நி)

## நீரிழிவுக்கு மருந்து கண்டுபிடித்த சீனா



(பீஜிங்)

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியை புதுமைமிக்க உயிரணு சிகிச்சை முறையின் மூலம் முழுமையாகக் குணப்படுத்தி சீனாவின் மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

சீன அறிவியல் கழகத்தை சேர்ந்த குழுவினரால் உருவாக்கப்பட்ட இந்த சிகிச்சை முறை, செல் டிஸ்கவரி என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சவுத் சைனா மோர்னிங் போஸ்ட் செய்தித் தகவலின்படி, 2021ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் உயிரணு மாற்று அறுவை சிகிச்சை சீன நாட்டை சேர்ந்த ஒரு நோயாளிக்கு மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பிடத்தக்க வகையில், பதினொரு வாரங்களுக்குள் அவர் இன்சுலின் ஊசி போடுவதை நிறுத்திக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து ஒரு வருட காலத்தில், இரத்த சர்க்கரை அளவு கட்டுப்படுத்தி, வாய்வழியாக மருந்துகளை உட்கொண்டு வந்தார்

இறுதியில் அதன் அளவையும் படிப்படியாகக் குறைத்து மொத்தமாக மருந்தை நிறுத்திக் கொண்டார் என்று அந்த செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் சீனாவின் புதிய உயிரணு சிகிச்சை முறை உண்மையில் பல கோடி மக்களைக் காப்பாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# மோதிய பேருந்து

# ப்பு, 39 பேர் காயம்

## துயரம்



ய பேர் காயமடைந்துள்ளதாக அந் நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மெர்சின் மாகாணத்தில் ஏற்பட்டுள்ளது.


துருக்கியின் தென்கிழக்கு நகரமான தியார்பாகிரில் இருந்து தெற்கில் உள்ள அதானாவுக்கு பயணித்த அதிசொகுசு பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

பலத்த மழை பெய்து கொண்டிருந்த போது பேருந்து எதிர்த் திசையில் வந்து கொண்டிருந்த இரண்டு கார்கள் மீது மோதியது. அதனைத் தொடர்ந்து லொறி ஒன்று மூன்று வாகனங்கள் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் சுமார் எட்டு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## கொடூரத் தாக்குதலை உடனே நிறுத்த வேண்டும்

# இஸ்ரேலுக்கு கண்டனம் தெரிவித்த ஐ.நா. சபை



(ஜெனீவா)

கொடிய மோதலில் இருந்து தஞ்சம் தேடிவந்த ஏராளமான அப்பாவிப் பொது மக்களை கொன்ற இஸ்ரேலின் நடவடிக்கைகளை நான் கண்டிக்கிறேன். காசாவில் பாதுகாப்பான இடம் இல்லை.

இந்தக் கொடூரத் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஐ.நா. சபை பொதுச்செயலாளர் அன்ரோனியோ குட்டரெஸ் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராகப் போர் பிரகடனம் செய்த இஸ்ரேல் இராணுவம், காசா மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

ரஃபா நகரை தவிர்த்து மற்றைய பகுதிகளை தடம் தெரியாத அளவிற்கு அழித்து விட்டது.

ஹமாஸுக்கு எதிராக போர் தொடங்கியதற்கான இலக்கை எட்ட வேண்டுமென்றால் ரஃபா நகர் மீது தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என தெரிவித்த இஸ்ரேல், ரஃபா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தது. இதற்கு பெரும்பாலான நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன.

ஐ.நா. நீதிமன்றம் ரஃபா மீது தாக்குதல் நடத்தக்கூடாது என உத்தரவிட்டது.

இதற்கிடையே, நேற்று திடீரென ரஃபா நகர் மீது வான் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 35 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

ரஃபா மீது தாக்குதல் நடத்தப்பட்டது துரதிஷ்டவசமான தவறு எனக் கூறிய இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 31: உலக புகையிலையற்ற தினம்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

ஊலகளாவிய ரீதியில் புகையிலையற்ற தினமாக மே 31 உலகசுகாதார நிறுவனத்தினால் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வருட கருப்பொருளாக "இளையோரை நோக்கிய புகையிலைப் பொருட்களின் பாவனையிலிருந்து அவர்களை முழுமையாக விடுபடச் செய்வது" (Advocating for an end to targeting Youth with harmful tobacco products) என்பதாகும். இளைய சமுதாயத்தை நோய்ந்து போனவர்களாக மாற்றுவதில் புகையிலைப் பொருட்களுடன் போதைப் பொருட்களின் பாவனை தற்போது எமது சமூகத்தில் பெருகிவருகின்றது. வளமான சந்ததி என்பதற்கு சவால்விடும் இத்தகைய போதைப் பொருட்களின் பாவனை இன்னமும் அதன் பாவனையாளர்களை அடிமைப்படுத்தியே வைத்திருக்கினறது. தினமும் இவற்றின் பாவனையின்றி இயக்கமே இல்லை என்னுமளவிற்கு பயன்படுத்துபவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றது.

வடபகுதியைப் பொறுத்தளவில் விவசாயப் பெருமக்களின் நட்டத்தை ஈடுசெய்யும் தவிர்க்க முடியாத பயிராக இன்றும் எப்போதும் புகையிலை பயிர் செய்யப்பட்டு வருகின்றது. எமது




நாட்டில் எந்தப் பயிர்செய்கை ஊக்குவிப்பு மற்றும் பொருளாதார சலுகைகளும் புகையிலை பயிர்செய்கைக்கு இல்லை. ஆனாலும் வழக்கமான பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயப் பெருமக்கள் புகையிலையை வருடத்தில் ஒருதரமாவது பயிர்செய்வதன் மூலம் ஏனைய பயிச்செய்கையில் வரும் பொருளாதார இழப்பை சீர்செய்கின்றனர். தென்பகுதிக்கு தேயிலையென்றால் வட பகுதிக்கு புகையிலை என்பதனை நினைவில் கொள்ளலாம்.

காலங்காலமாக புகையிலை எமது பகுதியில் பயிர் செய்யப்படுவதும் அதனை பின்னர் கோடா என்னும் திரவத்தில் முக்கியெடுத்து மதிலில் சூரியவெப்பத்தில் இயற்கையாக காயவைத்து மதிப்பேற்றஞ் செய்து புகையிலையை விற பனைக்கு விடுகின்றார்கள். புகையிலை பயிர்ச்செய்கைக்கு விவசாயப் பெருமக்கள் அதி முக்கியத்துவம் கொடுப்பதற்கு காரணங்கள் பல பல. மிக முக்கிய காரணமாக தவிர்க்க முடியாத பணப்பயிராக விவசாயிகளின் பொருளாதாரத்தை தக்கவைக்கும் பயிராக காணப்படுகின்றமையே ஆகும். மாற்றமடையும் கால நிலையினால் பயிற்பத்தி பாதிக்கப்பட்டு விவசாயப் பெருமக்கள் பொருளாதார இழப்பினை சந்திக்கும் நிலையிலும் புகையிலை உற்பத்தி அவர்களுக்கு கைகொடுக்கும் பயிராகவே இன்னமும் காணப்படுகின்றது.

இலைப்பயிராக வளர்க்கப்படும் புகையிலை புகைப்பதற்காக சுருட்டு,சிகரெட் போன்ற உருவங்களை பெறுவது மட்டுமல்லாது அதனை பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு என்பனவற்றுடன் சேர்த்தெடுத்து வாய்க்குள் வைத்து குதப்பும் பண்டமாக்கி வாய்சிவத்து அதுவே காலப்போக்கில் தவிர்க்க முடியாத ஒருவகை பழக்கவழக்கத்திற்கு அடிமையாக்கி விடுகின்றது. போதைப்பொருளிலுள்ள இரசாயனத்தைப் போலல்லாது இதிலிருக்கும் நிக்கொட்டின் என்னும் வேதியியில் பெருளினால் இதனை புகைப்பவர்கள் அல்லது வாய்குள் மெல்லுபவர்கள் நரம்புத் தொகுதியில் மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்த ஊக்குவிக்கின்றது. புகையிலையை தவிர்ப்பது மிகவும் அவசியமானதாகும். சுவாசத் தொகுதியையும் நரம்புத்தொகுதியையும் பாதிக்கும்

புகையிலையில் பூச்சி கொல்லித் தன்மை இருப்பது வரப்பிரசாதமே. இதனை பயிர்களில் ஏற்படும் பீடைகளைக் கட்டுப்படுத்த இயற்கை முறையில் பயன்படுத்துகின்றனர். ஆனால் புகையிலையை அறுவடை செய்து மதிலில் காயப்போடுவதனை வழக்கமாக கொண்டிருக்கும் விவசாயப் பெருமக்களுக்கு காலம் நேரம் மாறி பெய்யும் மழை பெருஞ் சவாலாகவே மாறியிருக்கின்றது. முறையாக காயாமல் மழையிலும் வெய்யிலிலும் இருக்கும் புகையிலை கட்டுக்களில் அஸ்பேஜில்லசுபிளேவர் எனப்படும் ஒருவகை பூஞ்சணத் தொற்று காணப்படுவது ஆய்வில் கண்டறியப்பட்டது. இந்த பூஞ்சணத்தின் பூஞ்சண இழைகள் மற்றும் வித்திகள் பின்னர் வெற்றிலை போடுபவர்களுக்கு நேரடியாகவே வாய்க்குள் செல்வதும் அதனால் ஏற்படும் விபரீதங்களும் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

புகையிலையை மெல்லுவதனால் புகைப்பதனால் தவிர்க்க முடியாத வாய் மற்றும் நுரையீரல் புற்றுநோய்கள் வருவதுடன் இவ்வாறாக ஜில்லசுபிறேவர் என்னும் பூஞ்சணம் வெளிவிடும் புற்று நோயை உருவாக்கும்பூஞ்சண நச்சுச் சுரப்புக்களான பியூமோனிசின் மற்றும் ஒச்ரா ரொக்சின் என்பனவும் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறான சுரப்புக்கள் இவ்வாறு பூஞ்சண தொற்று உள்ள புகையிலையை உட்கொள்ளுவதால் உடலில் பல தீங்குகளை ஏற்படுத்துகின்றன.

இவையனைத்தையும் கூறினாலும் புகையிலைக்கு அடிமையானவர்களை அதிலிருந்து வெளியெடுப்பது இலகுவான காரியமல்ல. ஆனாலும் அவர்களாக அதிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்புக்களை நாம் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். இது பற்றிய விழிப்புணர்வு தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் செய்யப்படுவது மிக அவசியமாகும். தெரியாது ஏற்படும் நோய்களைவிட தெரிந்தும் தம்மை நோய்வாய்ப்பட வைக்கும் புகையிலைப் பிரியர்களை அனைத்து வழிகளையும் கையாண்டு விடுபட்டு அவர்கள் சுகமான வாழ்க்கை வாழ நாம் உதவி செய்யலாம்.

இவற்றிற்கும் மேலாக இதனை எழுதும் போது புகையிலை செய்கையாளர்கள் தமது பயிர்செய்கைக்கு பங்கம் ஏற்பட்டுவிடுமோ என அங்கலாய்ப்பதும் புரிகிறது. புகையிலை செய்கையை முழுவதுமான பணப்பயிராகமாற்றி அவற்றை அந்நியநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியசெலாவாணியை பெருக்கிக் கொள்ள வாய்ப்புக்களுண்டு. எமது பயன்பாட்டிலிருந்து தவிர்த்து ஏற்றுமதிப் பொருளாக உலக சந்தைக்கு எடுத்துச் செல்வதன் மூலம் விவசாயப் பெருமக்களுக்கு வருமானத்த ஈட்டிக்கொடுப்பதுடன் எமது நாட்டின் அந்நியசெலாவணியை பெருக்குவதற்கும் புகையிலை பயிர்செய்கை உதவும். புகையிலை செய்கையால் ஏற்படும் தீங்குகளும் அதனால் விவசாயபெருமக்களுக்கு கிடைக்கும் ஆதாயமும் கவனத்திலெடுக்கப்பட்டு இப்பயிர்ச்செய்கையை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முறையான கண்காணிப்புடன் மேற்கொள்ள வழி செய்வதுடன் புகையிலைக்கான மாற்றுப்பயிரின் தேடல் இன்னமும் முற்றுப் பெறவில்லையென்பதும் இதில் கவனிக்கத்தக்கது.

## இன்று ஒரு தகவல் 138



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வீரம்

ஒரு வீரன் எப்படி இருப்பான்.இந்த கேள்விக்கு உங்கள் பதில் என்ன? வீரன் என்றால் அவன் பெரிய மீசை வைத்து இருப்பான். கையிலே கத்தி வைத்து இருப்பான் முழங்கைக்கு மேலே தாயத்து கட்டி இருப்பான். கண் சிவப்பாக இருக்கும். ஆள் பயில்வான் மாதிரி இருப்பான். அவன் தான் வீரன் என்று நாம் எல்லோரும் நினைத்து கொண்டு இருப்போம். ஆனால் வீரன் என்பவன் அவன் இல்லை.

ஒரு ராஜா தன்னுடைய மந்திரியைப் பார்த்து கேட்டார். நம்முடைய நாட்டில் சிறந்த வீரன் யார்? கோழை யார்? என்று சொல்ல முடியுமா? என்று கேட்டார். அமைச்சர் உடனே கோழை யார்? வீரன் யார்? என்பதற்கு விளக்கம் யுமா? அடுத்தவர்கள் பொருள் நமக்கு கிடைக்குமா என்னும் நினைப்பிலேயே இருக்கிறவர்கள். முயற்சி செய்யாதவன். பாடுபட்டு உழைக்காதவன்.சிரமப்பட்டு வேலை செய்து பிழைக்க விரும்பாதவன்.குடும்பத்தை காப்பாற்ற முடியாமல் சந்நியாசியாகப் போறேன் என்று சொல்கின்றவன். லஞ்சம் வாங்கிறேன் என்று சொல்லுகின்றவர்கள். இவர்கள் எல்லாம் கோழைகள். சரி அப்படி என்றால் வீரம் உள்ளவர்கள் யார் என்று கேட்டார்.

தன்னம்பிக்கையோடு உழைக்கிறவன். தன்னுடைய உழைப்பில் இருந்து கிடைக்கிற பணத்தை சிக்கனமாக செலவு செய்து தன்னுடைய குடும்பத்தை காப்பாற்றுகின்றவன்.சுய முயற்சி உள்ளவன். எப்பவும் சுறுசுறுப்பாக உள்ளவன்.இவர்கள் எல்லாம் வீரம் உள்ள வர்கள். இது அமைச்சருடைய விளக்கம். அமைச்சரின் கருத்தை கேட்டதும்

சரி அமைச்சரே இது எல்லம் கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கிறது. இருந்தாலும் இதை நான் அனுபவத்திலே பார்த்தால் நன்றாக இருக்கும். நம் நாட்டில் இதற்கு யாரையாவது உதாரணம் காட்ட முடியுமா? என்று கேட்டார்.

காட்டுகின்றேன் என்று சொன்னார் அமைச்சர்.சிறிது நாள் சென்றது. அந்த ராஜாவிற்கு பிறந்த நாள் வந்தது. அரண்மனையில் அதை முன்னிட்டு ஒரு வாரம் விருந்து. பொதுமக்கள் எல்லோரும் வந்து எந்த வித வேறுபாடும் இன்றி வந்து சாப்பிட்டு விட்டு போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அரண்மனையில் விருந்து என்று சொன்னால் சும்மா இருப்பார்களா? கூட்டம் கூட்டமாக வந்தார்கள். வந்து விருந்து சாப்பிட்டு விட்டு போனார்கள்தினமும் கோலாகலமாக நடந்த கொண்டு இருக்கிறது.அந்த சமயத்தில் ஒரு நாள் அமைச்சரும் ராஜாவும் வெளியே உலாவச் சென்றார்கள். ஊருக்கு வெளியே ஒரு வயதான ஆள் வயலிலே வேலை செய்து கொண்டு இருந்தான். அவன் இவர்களை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. தன்னுடைய வேலையிலே கண்ணும் கருத்துமாக இருந்தான். ராஜாவும் மந்திரியும் ஒருதரை ஒருதர் பார்த்துக் கொண்டார்கள். மந்திரி அவன் அருகில் மெதுவாக சென்றார்.

ஏன் பெரியவரே அரண்மனையிலே பெரிய விருந்து நடக்கிறதே அது உனக்கு தெரியாதா? மக்கள் எல்லாம் சென்று சாப்பிட்டு வந்து கொண்டு இருக்கிறார்களே நீயும் போய் சாப்பிட்டு வர வேண்டியது தானே. அதற்கு அந்த ஆள் அரண்மனையில் விருந்து நடப்பது எனக்குத் தெரியும் சொன்னதற்கு நன்றி இருந்தாலும் என் கையாலே உழைத்து அதனாலே கிடைக்கிற சொற்ப வருமானத்திலே கிடைக்கிற உணவே எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அரண்மனை விருந்தை விட இது தான் எனக்கு பெரியது. அதுவுமில்லாமல் அரண்மனையில் ஒரு வாரத்திற்கு உணவு தருவார்கள். அதன் பின்பு என்ன செய்வது. என்று சொல்லி விட்டு தொடர்ந்து தன்னுடைய வேலையை கவனிக்க ஆரம்பித்து விட்டார். இப்போது அந்த அமைச்சர் ராஜா விடம் என்னுடைய வாழ்நாளில் நான் பார்க்கிற வீரமுள்ள ஒருவர் இவர் ஒருவர் தான் என்று சொன்னார். ராஜாவும் அதை ஒத்துக் கொண்டார்.

இந்தக் கதையை கேட்டு இந்தக் காலத்து ஆசாமி ஒருவர் சொன்னார்.என்னுடைய பிறந்த நாளுக்கு நான் வருடா வருடம் விருந்து வைப்பேன். நண்பர்களை எல்லாம் கூப்பிடுவேன். அடுத்த வாரம் எனக்கு பிறந்த நாள் வருகிறது. எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர் ஒருவரை நான் கூப்பிடப்போவதில்லை என்றார் உறுதியாக . ஏன் சார் என்றேன். போன வருடம் பிறந்த நாளன்று வந்தவன். அவன் இன்னும் திரும்பி போகவில்லை என்று சொன்னான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மீனவர்கள் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தியோ நகர் பகுதியில் சுதந்திரமாக மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபடு வதற்கு அனுமதிக்குமாறு கோரி பாதிக்கப்பட்ட மீனவர்கள் முன்னெடுத்திருந்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோரக் கிராமங்களில் ஒன்றான தியோநகர் பகுதியில் பிராதான வீதியினையும்கடற்கரையினை யும், இணைக்கும் இணைப்பு வீதியானது சில தரப்பினரால் வேலியிட்டு அடைக்கப்பட் டுள்ளதாக மீனவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதி மக்களினால் வேலித்தடைகள் அகற்றப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் சுற்றுலாத்தளம் ஒன்றினை அமைத்துள்ள தனியார் நிறுவனம் ஒன்று மீனவர் களுக்கு தொடர்ச்சியாக இடையூறுகளை விளைத்து வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே இதற்கு உரிய தீர்வு கிடைக்கப்பெறும் வரையில் தொடர் போரா ட்டத்தில் ஈடுபடப் போவதாக மக்கள் தெரிவித்து போரா ட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து பிரதேச செயலக அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது குறித்த பிரச்சினைக்கு விரைவாக தீர்வு பெற்றுத்தரப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்ட நிலையில் போராட்டம் தற்காலி கமாக கைவிடப்பட்டுள்ளது.

தீர்வு கிடைக்காவிட்டால் இரண்டு வாரங்களின் பின் னர் மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (நி)

## மதுபானசாலையை அகற்றுமாறு ஊர்காவற்றுறையில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையத்தை அகற்ற கோரி நேற்று அப்பகுதி மக்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள், நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என்பவற்றுக்கு அருகில் குறித்த மது விற்பனை நிலையம் காணப்படுகிறது. அத்துடன் பல சமூகப் புறழ்வான நடவடிக்கைகள் ஊர்காவற்துறை பிரதேசத்தில் அதிகரித்துள்ளது.

எனவே தீவக மக்களின் நலன் கருதி குறித்த மது விற்பனை நிலையத்தை அகற்ற கோரி இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை குறித்த மது விற்பனை நிலையத்தில், இரவு வேளைகளில் நேரம் தாழ்த்தியும் விற்பனைகள் இடம்பெறுவதாகவும், பௌர்ணமி தினங்கள் உள்ளிட்ட, மதுவரி திணைக்களத்தால் மதுபானசாலைகளை மூட உத்தரவிடப்படும் நாட்களிலும் மது விற்பனை இடம்பெறுவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

போராட்டத்தின் முடிவில் ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் சதீசன் மஞ்சுளாதேவியிடம் மகஜரையும் கையளித்தனர். (நி-33)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3129


### நஜனிகா




### அபிநாஷ்




### கரிகாலன்




### அபிஷாந்




### டிபிஷா




### அபிஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 493





மனிதக் குரலையே கேட்கப் பிடிக்கவில்லை. ஆ! மனிதர்கள் எத்தனை கொடூரமானவர்கள்? எதற்காக இவ்வளவு கொடூரமான சொற்களைப் பேசுகிறார்கள்! எல்லாரும் ஊமைகளாகவே இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

சிறிது தூரம் காட்டில் புகுந்து சென்ற பிறகு, தொண்டைமானாற்றின் கரையை அடைந்தாள். அந்தக் கரையோடு உள்நாட்டை நோக்கி நடந்தாள். அவளுடைய படகை விட்டிருந்த இடத்தைக் குறி வைத்து நடந்தாள். ஆம், சீக்கிரம் அந்தப் படகைப்போய்ச் சேர வேண்டும். படகில் ஏறிக் கொள்ள வேண்டும். தன்னந்தனியாகக் கடலில் செல்ல வேண்டும். மனிதர்களுடைய குரல் காதில் விழ முடியாத நடுக்கடலுக்கே போய்விட வேண்டும். துடுப்பைச் சும்மா வைத்துவிடவேண்டும். அலைகளில் மொத்துண்டு படகு மிதந்து மிதந்து போகவேண்டும். தானும் அதில் போய் கொண்டிருக்க வேண்டும். எல்லையில்லாத கடலில் முடிவில்லாமல் போய்க் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அலைபட்ட தன் உள்ளம் அமைதி பெறும். சேனாதிபதியின் வார்த்தைகளினால் நொந்த உள்ளத்தின் வேதனை தீரும். ஆத்திரம் தணிந்து ஆறுதல் உண்டாகும்.

அந்தப் பொல்லாத கிழவன் என்ன சொன்னான்! "வலை போட்டுக் கடலில் மீன் பிடிப்பதோடு நிறுத்திக் கொள்! இளவரசருக்கு வலை போடாதே!" என்றான்.

நானா இளவரசருக்கு வலை போடுகிறேன்! சீச்சீ! அந்தக் கிழவனின் புத்தி போன போக்கைப் பார்! ஆம் தரையில் வாழும் மனிதர்களைக் காட்டிலும் கடலில் வாழும் மீன்கள் எவ்வளவோ நல்ல ஜந்துக்கள்! அவை இப்படியெல்லாம் கொடூரமாகப் பேசுவதில்லை. ஆழ்கடலில் நீந்தியும் மிதந்தும் எவ்வளவு ஆனந்தமாகக் காலங்கழிக்கின்றன! அவற்றுக்குக் கவலை ஏது? துயரம் ஏது? ஆகா! நான் கடலில் வாழும் மீனாகப் பிறந்திருக்கக்கூடாதா. அப்படிப் பிறந்திருந்தால், இந்த உலகத்தின் துயரங்கள், துவேஷங்கள், ஆசாபாசங்கள், கோபதாபங்கள், இவற்றில் அகப்பட்டுக் கொள்ளாமல் சதா சர்வ காலமும் ஆழ்கடலில் நீந்தி நீந்திப் போய்க் கொண்டிருக்கலாம் அல்லவா? அப்போது தன்னையும் இளவரசரையும் பிரிப்பதற்கோ வஞ்சகம் செய்வதற்கோ விஷமமாகப் பேசுவதற்கோ யாரும் இருக்க மாட்டார்கள் அல்லவா? இல்லை, இல்லை! அதுவும் நிச்சயமில்லை. அங்கேயும் இந்தப் பொல்லாத மனிதர்கள் வந்து வலை போட்டுப் பிடித்துக் கொண்டு போகப் பார்ப்பார்கள். இரண்டு மீன்களில் ஒன்றை மட்டும் கொண்டு போனாலும் போவார்கள்! பாதகர்கள்!

பூங்குழலியின் மனத்தில் பொங்கிய ஆத்திரம் அவளுடைய கால்களுக்கு அளவில்லாத விரைவைக் கொடுத்தது. சூரியன் உச்சிவானுக்கு வந்த சமயம் அவள் படகை விட்டிருந்த இடத்தை அடைந்துவிட்டாள். நல்ல வேளை படகு விட்டிருந்த இடத்தில் கட்டிப் போட்டபடியே இருந்தது. அவளுடைய ஆருயிர்த் தோழி அந்தப் படகுதான். அவளுடைய அடைக்கல ஸ்தானம் அந்தப் படகுதான். துன்பமும், துரோகமும் சூழ்ந்த இந்தப் பொல்லாத உலகத்தில் தனக்கு அமைதியும் ஆனந்தமும் அளிப்பது அந்தச் சாண் அகலத்துப் படகுதான். அதை யாரும் அடித்துக்கொண்டு போகாமல் விட்டு வைத்தது பெரிய காரியம்.

'இனி எது எப்படியாவது போகட்டும். இளவரசரை அந்தக் கிழச் சேனாதிபதி காவல் புரியட்டும். கொடும்பாளூர் வீட்டுப் பெண்ணையே அவர் கழுத்தில் கட்டிவிடட்டும். அதனால் எனக்கு என்ன? என் படகு இருக்கிறது துடுப்பு இருக்கிறது கையில் வலிவு இருக்கிறது விசாலமான கடலும் இருக்கிறது. சமுத்திர ராஜனே! உன் அருமைப் புதல்வியை வேறு யார் கைவிட்டாலும் நீ கைவிட மாட்டாய் அல்லவா?

"சமுத்திர குமாரி" என்று இளவரசர் திருவாயினால் கூறியதைப் பொய்யாக்க மாட்டாய் அல்லவா?


பூங்குழலி படகில் ஏறிக் கொண்டாள். கடலை நோக்கிப் படகைச் செலுத்தினாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வன்முறைக்குத் தண்டனை மரணம்!



ஒரு பெரிய மரத்தின் உச்சியில், தேன் கூடு ஒன்று அமைந்திருந்தது. தேனீக்களின் தலைவியாகிய ராணி தேனீக்கு, கடவுளைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அது கடவுளை நினைத்து தவம் செய்தது.

ராணித் தேனீயின் முன்னால் தோன்றினார் கடவுள்.

"ராணித் தேனீயே உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார் கடவுள்.

கடவுளே தன் முன் பிரசன்னமாகியிருக்கும் போது, உயர்ந்த நோக்கத்துடன் கூடிய ஒரு வரத்தைக் கேட்கும் நல்ல புத்தி ராணித் தேனீக்கு ஏற்படவில்லை.

"இறைவனே! என்னிடமிருக்கும் தேனை நாடி வருபவர்களைத் கொட்டி, அவர்கள் சகிக்க முடியாத வேதனையை அனுபவிக்குமாறு செய்தருள வேண்டும்," என்று ராணித் தேனீ கேட்டுக் கொண்டது. அதைக் கேட்டு கடவுள் மிகவும் வருத்தமடைந்தார்.

"ராணித் தேனீயே! பிறருக்கு உதவி செய்யக்கூடிய நல்ல வாய்ப்பை, வசதியை நீ கேட்டிருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். நீயோ பிறருக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காகவே வரம் கேட்கிறாய்! நீ கேட்ட வரத்தைக் கொடுக்காமலிருக்க முடியாது. வரம் கொடுக்கும் அதே சமயம், உனக்கு ஒரு பாடமும் போதிக்க விரும்புகிறேன்.

"என்னுடைய வரத்தின் மூலம் உனக்கு கொடுக்கு ஒன்று ஏற்படும். அந்தக் கொடுக்கால் மற்றவர்களைக் கொட்டி வேதனைக்குள்ளாக்கும் போது, உனது கொடுக்கின் நுனி, உன்னால் கொட்டப்படுபவர்களின் உடலில் தொற்றிக் கொள்ளும். உடனே நீ உயிரிழந்து விடுவாய்." இவ்வாறு கூறி விட்டு மறைந்தார் கடவுள்.

அன்று முதல் அந்த தேனீ யாரையும் அந்தக் கொடுக்கால் கொட்டவில்லை. தேனீ தான் செய்த தவறை எண்ணி வருந்தியது. காரணம் அந்த தேனீ யாரையாவது கொட்டினால் அது இறந்துவிடும்.

நீதி : வன்முறையில் விருப்பம் கொண்டவர்கள், தாங்கள் கையாளும் வன்முறையாலேயே அழிந்துவிடுவர். மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்துச் செயற்படுபவர்களுக்கு நன்மையே வந்து சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும். ~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# கருத்து நிலை மாற்றங்களை கவனத்தில் கொள்ளுங்கள்

மாற்றங்கள் நிலைபேறானவை. எனவே எந்த விடயத்தை நாம் எடுத்துக் கொண்டாலும் அதில் ஏற்படக்கூடிய மாற்றங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாற்றங்கள் பற்றிய கருத்துக் கணிப்புகள் மிகவும் அவசியமானவை. அதனை நாம் செய்யாமல், கடந்த கால நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை எடுப்பது மிக மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அந்த வகையில், நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தரப்பாகிய நாம் எந்தத் தீர்மானத்தை எடுப்பதாக இருந்தாலும் அது தொடர்பில் மக்களின் கருத்துக்கள் எவ்வாறாக உள்ளதென்ற ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

இங்கு மக்கள் என்பது தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களைக் குறிப்பதாகும்.

ஆம், இப்போது சிலர்; ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற கருத்தைக் கூறுகின்றனர்.

பொதுவில் முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் ஆழமாக ஆராயப்பட வேண்டும்.

எந்தக் கருத்தாயினும் அவை எழுந்தமானமாக நிராகரிக்கப்படக்கூடாது. அன்றி, முன்வைக்கப்பட்ட கருத்துக்குப் பின்னால் ஒரு சதித்திட்டம் இருக்கிறது. சர்வதேச அழுத்தம் தெரிகிறது என்றெல்லாம் கூறுவது நியாயமற்றது.

அவ்வாறு யார் கூறினாலும் அவர்களைச் சந்தேகத்துடன் பார்க்கின்ற நிலைமையே இப்போது நம் மக்கள் மத்தியில் உண்டு.

ஆக, முன்னொரு காலத்தில் ஒருவர் ஒரு கருத்தை முன்வைத்தால், அவர் மீது கொண்ட நம்பிக்கையின் பாற்பட்டு அந்தக் கருத்தை நம் மக்கள் அப்படியே ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் தற்போது நிலைமை அதுவன்று.

இப்போது மக்கள் மிகத் தெளிவாக உள்ளனர். யார் யார் வாய்க்கேட்பினும் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதில் மக்கள் விழிப்பாக உள்ளனர்.

எனவே முன்புபோல முந்திக்கொண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது சம்பந்தப்பட்டவருக்கே கேடாக அமையும்.

இவையொருபுறமிருக்க, சமகாலத்தில் தென்னிலங்கை மக்களின் மனநிலை மாற்றமடைந்துள்ளது.

1983 மற்றும் 2009 ஆகிய காலப் பகுதிகளில் இருந்த மனநிலை இப்போதும் இருப்பதாக நாம் கருதினால் அது மிகப்பெரும் தவறு.

ஆம், சிங்கள மக்களில் கணிசமானவர்கள் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர்.

இதை நாம் கூறும்போது சில புறநடைகள் இருக்கவே செய்யும். அதற்காக அந்தப் புறநடைகள் முழுமைக்கும் பொருந்தமாட்டா.

ஆகையால், பொதுவேட்பாளரை நாம் நிறுத்துவது தொடர்பில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய சிங்கள மக்களின் மனநிலை எவ்வாறாக உள்ளதென்பதையேனும் கருத்துக் கணிப்பின் மூலம் நாம் கண்டறிவது மிகவும் அவசியமானது.

### கடமை நேரத்தில் தாக்கப்பட்ட ஊழியர்

# யாழ். போதனாவின் பாதுகாப்பு நிலை குறித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அதிருப்தி

## தீர்வு கோரி ஆளுநருக்கு அவசர கடிதம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையினுள் அத்துமீறி மோட்டார் சைக்கிளில் உள்நுழைந்த இளைஞனால் கடமையில் இருந்த வைத்தியசாலை ஊழியர் தாக்கப்பட்டமையினை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற வேண்டும் எனவும் வைத்தியசாலையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நான்கம்சக் கோரிக்கைகளினை முன்னிறுத்தி வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஆகியோருக்கு அவசர கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில், நேற்று முன்தினம் இரவு 10:30 அளவில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் மது போதையில் வந்த இருவர் யாழ் போதனா வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவினுள் தமது வண்டியை செலுத்தினார்கள்.

வண்டியின் பின்னால் இருந்தவர் மது போதையில் தனது கையை கண்ணாடிக்குத் தானே இடித்ததனால் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற வந்தவர். அவர் அனுமதிக்கும் வைத்தியரின் சிபாரிசு இல்லாமல் தானே சிகிச்சை அலகினுள் பிரவேசித்தார்.

மற்றையவர் விடுதியின் உள்ளே மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வைத்தியசாலை ஊழியர்களுடன் தகாத வார்த்தைகளை பேசியதோடு அல்லாமல் அங்கிருந்த பிரிண்டரினை தூக்கி ஊழியர் ஒருவரின் மீது வீசி அவரது தலையில் படுகாயத்தை ஏற்படுத்தி இருந்தார்.

பாதிக்கப்பட்ட வைத்தியசாலை ஊழியர் சத்திர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மதுபோதையில் வந்த நபர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகிறது.

உடனடியாக சம்பவம் தொடர்பான உள்ளக விசாரணை ஆரம்பிக்கப்பட்டு பாதுகாப்பு பொறிமுறையில் உள்ள தவறுகள் கண்டறியப்பட்டு உடனடியாக திருத்தப்பட வேண்டும்.

கடமையில் உள்ள வைத்தியசாலை ஊழியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வைத்தியசாலைக்கு வருகின்ற அப்பாவி நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட நபர் ஆகக் கூடிய சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படவேண்டும்.

இது தொடர்பாக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாதவிடத்து வைத்தியசாலையில் உள்ள அனைத்து தொழிற் சங்கங்களும் இணைந்து தொடர் தொழிற்சங்க போராட்டத்திற்கு செல்ல வேண்டி ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

# ஜனநாயக நாடொன்றுக்கு தேர்தல்கள் மிக அவசியம்

## பொதுஜன பெரமுன எடுத்துரைப்பு

ஜனநாயக நாட்டிற்கு தேர்தல்கள் மிக அவசியம். தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயகத்திற்கும் பொருந்தாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நெலும் மாவத்தையில் நேற்று இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் கருத்துரைத்த அவர் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக் காலம் நீடிப்பு என்பது ஜனநாயக நாட்டின் அடிப்படை கொள்கைகளை சேதப்படுத்தியுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டதாகவும் தேர்தல்கள் எந்த வகையிலும் பிற்போடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை என்பது மக்களின் விருப்பத்தினாலேயே ஏற்பட வேண்டுமே தவிர அவர்களின் குரலை தாமதிப்பதன் மூலம் அல்ல எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7,10)

# பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் காலம் உண்டு

## அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன

அரசியலமைப்பின்படி பாராளுமன்றத் தேர்தலை இந்த வருடம் நடத்த வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை அது இவ்வாண்டு அவசியமற்றது என அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ள அவர் இந்த வருடத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் சாத்தியம் இல்லை என சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார யோசனை ஒன்றை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# காசா சிறுவர் நிதியத்திற்கு ரூ. 127 மில்லியன் நன்கொடை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஆரம்பிக்கப்பட்ட காசா சிறுவர் நிதியத்திற்கு இதுவரையில் சுமார் 127 மில்லியன் ரூபாய் நன்கொடையாகக் கிடைத்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கு நாட்டிலுள்ள நன்கொடையாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்கள் பங்களிப்புச் செய்துள்ளதாகவும் அத்துடன், பல வேறு தரப்பினரிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின்படி, இந்த நிதியத்திற்கு நன்கொடை வழங்குவதற்கான கால அவகாசம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது..

இந்த நிதியத்திற்கு கிடைக்கப்பெறும் நன்கொடை, உடனடியாக ஐக்கிய நாடுகளின் நிவாரண அமைப்புகளுக்கு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7,10)

# குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

பசறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மில்லபெத்த பகுதியில் குளவிக் கொட்டிற்கு இலக்கான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தோட்டத்தில் மிளகு பறிப்பதற்குச் சென்ற நிலையில் அவர் குளவிக் கொட்டுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, ஹொப்டன் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பசறை பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

02

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இங்கிலாந்திலேயும் ஒருகாலத்தில் மன்னர்கள் சர்வாதிகாரிகள் போல தாம் வைத்ததே சட்டம் என்று தனியாட்சி செலுத்தியபோது, பல்வேறு சட்டங்களையும் ஸ்தாபனங்களையும் வகுத்து அவர்களின் சர்வாதிகாரத்தைச் சிதைத்தவர்கள் லிபரல்கள். இப்படியான லிபரல்களுக்கு இலங்கையிலே தேசாதிபதிக்கிருந்த சர்வாதிகாரம் பிடிக்கவில்லை.

லிபரல் கொள்கைகளில் (லிபரல் கொள்கைகளை, தாராளக் கொள்கை என்று கூறலாம்) நன்கு திளைத்திருந்த கோல்புறூக் தாம் சிபாரிசு செய்த சீர்திருத்தங்களில் லிபரல் கொள்கைகளைப் புகுத்தினார். எல்லா விடயங்களிலும் தனி மனிதனுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும் அரசாங்கம் அவன் விடயத்தில் தலையிடக்கூடாது. அரசாங்கம் நிருவகிக்கும் விடயத்தில் தனி மனிதனுக்கு உரிமையிருக்க வேண்டும்.

தனி மனிதர்கள் தமக்கான பிரதிநிதிகளை அரசியல் மன்றங்களுக்குத் தெரிவு செய்தனுப்பி அதன் மூலமாக நாட்டு நிர்வாகத்திற் பங்குபெற உரிமையுடையவர்களாவர். வியாபாரம், வர்த்தகம் கைத்தொழில் என்னும் இன்னோரன்னவற்றில் அரசாங்கம் தலையிட்டுக் கட்டுப்பாடுகள் விதிக்க எண்ணுகிறது. தேசத்துச் செல்வ விருத்திக்கு, அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற தனிமனிதனது சுதந்திரமான முயற்சியே காரணமாக இருக்கவேண்டும். இவ்விதமான தனி மனிதனின் முயற்சியே செல்வ வளர்ச்சிக்கு உற்ற சாதனம் என்னும் இன்னோரன்னவையே லிபரல் கொள்கைகள் ஆகும்.

இவற்றை கோல்புறூக் தமது சிபாரிசுகளில் வெளியிட்டார். அக்கால இலங்கைக்கு இவை எல்லாம் ஏற்றனவாக இல்லாதிருந்த போதிலும் பிற்காலத்து இலங்கை அரசாங்கம் புதுப்புது வழிகளில் தொண்டாற்றி இந் நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவி புரியச் செய்வதில் அக் காலத்திய இச் சிபாரிசுகள் பெருந்துணை செய்தன என்பதை மறுப்பதற்கில்லை.

கோல்புறூக், கமரூன் என்பவர்கள் செய்த சிபாரிசுகள் முக்கியத்துவம் வாய்ந்தன, மதிப்பிடற்குரியன. இக்கால இலங்கையை உருவாக்குவதில் இச்சிபாரிசுகள் பெரிதும் உதவி செய்தன என்றும் கூறலாம்.

இன்று இந் நாட்டிலே பிரதிநிதித்துவ பொறுப்பாட்சி நிலவி வருகிறது. சாதி, சமய, வகுப்புப் பேதம் பாராட்டப்படாது "எல்லோரும் சமம்" என்ற நிலை ஏற்பட்டு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பரிபூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன? இவற்றுக்கு விதையிட்டவர்கள் யார்? என்று பின்நோக்கி நாம் ஆராய்வோமானால் கோல்புறூக், கமரூன் என்பவர்களே விதையிட்டவர்கள் என்றும் அவர்கள் அக்காலம் செய்த சிபாரிசுகளே காரணம் என்றும் ஐயம் திரிபறக் கூறலாம்.

கோல்புறூக் செய்த பிரதான சிபாரிசுகளே இனி ஆராய்வோம். இராஜ காரியமுறையை ஒழிக்க வேண்டுமென அவர் கூறினர். இராஜ காரிய முறை தொன்றுதொட்டு வந்த ஒரு முறை. ஆனால் 1832 ஆம் ஆண்டளவில் இம்முறை செல்லரித்து பல சந்தர்ப்பங்களில் அநீதியையும் தீங்கையும் விளைத்தது.

உதாரணமாக, எந்தக் காணியையும் மானியமாகப் பெற்றவன் ஒரு ஆண்பிள்ளையின் சேவையை அரசாங்கத்துக்கு அளிக்க வேண்டுமென்று இருந்தது. குடியானவர்கள் வைத்திருந்த எல்லாக் காணிகளும் ஒரேயளவு இல்லை. ஒரே தொகையினர்தான் எல்லாக் காணிகளிலும் இருக்கவுமில்லை. இன்னும், சில காணிகள் அதிக விளைவுள்ளனவாகவும், சில விளைவில்லாதனவாகவும் இருந்தன.

ஆகவே எல்லாக் காணிக்காரருக்கும் ஒரே வித முறையை அநுட்டிப்பது பொருத்தமாக இருக்கவில்லை. மேலும் இவ் இராஜகாரிய முறையின்படி, குறித்த ஒரு சாதியிற் பிறந்தவன் குறித்த ஒருவிதமான இராஜகாரியம் புரியவேண்டும். அவன் தன் காணியை விட்டுப் போகவோ, தொழிலை விடவோ முடியாது. எனவே அவனுக்குச் சுதந்திரம் இல்லை. இப்படியான ஓர் இராஜ காரிய முறையில் அரசாங்கம் தன் புரிபாலன வேலைகளுக்குத் தங்கியிருப்பது, ஓர் அடிமை முறையை நீடிக்கச் செய்வதில் அது உதவி புரிவதை நிகர்க்கும்.

இராஜகாரிய முறையினால் அரசாங்கம் பொருளாதார விடயமாக நன்மை பெறுகிறதோ என்றால் அதுவும் இல்லை. ஏன்? வியாபார வர்த்தகத் தொழிலையோ, விவசாயத்தையோ இம்முறை ஊக்குவதாக இருக்கவில்லை. தாம் மற்றவர்களிலும் பார்க்க முன்னேற வேண்டும், முயற்சியாற் புகழ்ச்சியடைய வேண்டும் என்று அவாக் கொண்டு முயற்சிகளில் ஈடுபட விரும்புவோர்க்கு மானியகால இராஜகாரிய முறை சந்தர்ப்பம் அளிக்கவில்லை. இதன் பயனாக நாட்டின் செல்வம் விருத்தியாகாது போகவே அரசாங்கமே ஈற்றில் நட்டவாளியாகியது.

1833 ஆம் ஆண்டில் இராஜ காரிய முறை ஒழிக்கப்பட்டது. சட்ட பூர்வமாக இந்தப் புராதன முறை ஒழிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒவ்வொரு இலங்கையனும் சுதந்திரவானாகி தனக்கு விரும்பிய தொழிலைத் தான் மேற்கொள்ள முடிந்தது. இராஜகாரிய முறை சட்ட பூர்வமாக ஒழிக்கப்பட்டதோடு சாதிக் கட்டுப்பாடும் தளர்ந்தது. சட்டத்தின் முன்னிலையில் எல்லாரும் சமமாக்கப்பட்டனர். இவ்வாறாகச் சட்டப்படிக்கேனும் தனி மனிதன் சுதந்திரம் என்பது பெறப்பட்டது.

இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டதோடு சிற்சில வியாபாரங்களிலும், தொழில்களிலும் இருந்த ஏகபோக உரிமை முறையும் ஒழிக்கப்பட்டது. இந்த ஏகபோக உரிமைகளைப் போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும், அவர்களுக்குப் பின், தமது பரிபாலன ஆரம்ப காலத்தில் பிரிட்டிஷாரும் வைத்திருந்தனர். கறுவா வியமான ஏகபோக உரிமைக் கட்டுப்பாட்டையும் வியாபாரம், விவசாயம் என்பன விடயமாகவிருந்த உரிமைகளையும் அரசாங்கம் கைவிட்டது. அரசாங்கம் இவ்வாறு கை விட்ட முயற்சிகளைத் தனிப்பட்டவர்கள் ஏற்று நடத்தினர்.

சிலகாலத்தின் பின்னர் இம் முயற்சிகளில் இலங்கையரும் ஈடுபட்டு அவற்றை விருத்தியாக்கினர். ஆனால் ஆரம்ப காலத்திலே போதிய முதற் பணத்தையும் தொழிற் பயிற்சியையும் கொண்டிருந்த ஐரோப்பியர்தான் இத் தொழில்களில் தீவிரமாக ஈடுபட்டு அதிகபயன் அடைந்தனர்.

குடியேற்ற நாட்டுப் பரிபாலன முறையில் இலங்கையைச் சர்வாதிகாரமாக முந்திய தேசாதிபதிகள் பரிபாலித்தனர். இச்சர்வாதிகார முறையின் அம்சங்கள் சிலவற்றுக்கும் கோல்புறூக் திருத்தங்கள் முடிவு செய்தன.

பிரிட்டிஷ் பரிபாலனத்து ஆரம்ப காலத்திருந்த தேசாதிபதிகள் நல்லாட்சி புரியும் சர்வாதிகாரிகளாக இருக்க வேண்டும் என்றே பிரிட்டிஷ் அரசாங்கம் காத்திருந்தது. இத்தேசாதிபதிகள் தம்மிடம் பொறுப்பிக்கப்பட்ட குடியேற்ற நாடுகளை நல்லாட்சி புரிவதற்காக, அவர்களிடம் சர்வாதிகாரமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இவ்வதிகாரத்தைக் கொண்டு அவர்கள் நல்லாட்சி புரிந்தால் அவர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் மெச்சியது. ஆனால் அவ்வதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, எதிர்பார்த்தபடி பரிபாலனம் செய்யாவிட்டால் அவர்களைத் திருப்பிக் கூப்பிட்டுவிடும். இவ்வாறான சர்வாதிகார ஆட்சி முறையை லிபரல்கள் விரும்பவில்லை.

அரசாங்கத்தை நடத்துவோர் ஜனப்பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து அரசியல் அலுவல்களைச் செய்ய வேண்டும் என்ற சித்தாந்தம் கொண்டுள்ளவர்கள் லிபரல்கள். எனவே அக்காலத்திருந்த சர்வாதிகார முறையை கோல்புறூக் அகற்றிவிட வேண்டும் என எண்ணியமை நூதனம் அல்ல.

**கோல்புறூக் சீர்திருத்த அம்சங்கள் பின்வருமாறு:-**

- இலங்கையிலே ஓர் சட்ட நிரூபண சபையினையும் சட்ட நிருவாக சபையினையும் அமைக்க வேண்டும்

- சட்ட நிரூபண சபையைத் தேசாதிபதியானவர் தம் பரிபாலனக் கருமங்கள் விஷயமாகக் கலந்தாலோசிக்கவேண்டும் ஆனல் தேசாதிபதியே பரிபாலனக் கருமங்களுக்கும் நிதி பற்றிய கருமங்களுக்கும் பொறுப்பாளியாயிருப்பதனால் அவர் இச்சபையின் ஆலோசனைகளுக்குக் கட்டாயம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற நியதியில்லை.

- சட்ட நிருவாக சபை கொண்டுள்ள அபிப்பிராயத்துடன் தேசாதிபதி ஒத்துப்போகாவிட்டால் அதற்கான காரணத்தினை அவர் குடியேற்ற நாட்டு மந்திரிகு தெரிவிக்க வேண்டும்.

- சட்ட நிரூபண சபையில் நியமன அங்கத்தவர்கள் இருந்தனர். இவர்கள் இலங்கையில் வாழ்ந்த பல்வேறு சாதியினரின் பிரதிநிதிகளாக இருந்தனர். ஆகவே, பிரதிநிதித்துவ அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் அரசியல்-மன்றம் கோல்புறூக்கின் சிபாரிசுகளின் பயனாக உண்டானது என்றும் கூறலாம்.

- தமிழர், சிங்களர், பறங்கியர், ஐரோப்பிய வர்த்தகர், தோட்டத் துரைமார் என்பவர்களின் பிரதிநிதிகளாக அவர்கள் இருந்தனர். இவர்களுக்கு அரசியற் பரிபாலன விடயமாக எவ்விதமான அதிகாரமும் இருக்கவில்லை. ஆனால் பேச்சுச் சுதந்திரம் இருந்தது. இலங்கையில் உள்ள ஜனங்களின் தேவைகள் என்ன? அவர்களின் உரிமைகள் என்ன? அவர்களின் கோரிக்கைகள் என்ன? அவர்களுடைய நிலைமையை எந்த எந்த விதத்தில் திருத்த வேண்டும் என்று இன்னோரன்னவாறு இப்பிரதிநிதிகள் நிரூபண சபையில் இருந்தவாறு தேசாதிபதிக்கு அறிவிக்கமுடியும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபல...

டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடியில் உள்ள தேசியப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நெல்லியடி நகரப் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெரு பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவராவார்.

சந்தேக நபரிடம் இருந்து 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் போதை வியாபாரத்தில் பெறப்பட்ட 80 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமான பணமும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-7,10,60)

## 80 போதை...

பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கஜேந்திரன் தலைமையிலான பொலிஸார் நேற்று மாலை விசேட சோதனை நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டனர்.

இதன்போது இளைஞர் ஒருவரிடம் இருந்து 80 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வியாபார நோக்கில் குறித்த போதை மாத்திரைகளை வவுனியா, குருமன்காடு பகுதிக்கு கொண்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,10,250)

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் கைது செய்யப்பட்டவர் வழங்கிய தகவலின் பிரகாரம் சிலாபத்துக்குச் சென்ற விசேட படையினர் இவ் விருவரையும் கைது செய்தனர். (ம-7,10)

## யாழ்.திருநெல்...

யில் உணவகத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஒருவர் மதிய உணவினை வாங்கியுள்ளார். அதனை வீட்டில் கொண்டு சென்று அவிழ்த்து பார்த்தபோது மட்டத்தேள் ஒன்று காணப்பட்டுள்ளது. அதனை அடுத்து அது தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் உணவகத்திற்கு பொதுச் சுகாதார பரிசோதகர் சென்றவேளை, சுகாதார குறைபாடுகளை அவதானித்ததுடன், ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்ட திருத்த வேலைகளை செய்யாததையும் அவதானித்து, அது தொடர்பில் உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதையடுத்து, உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று, 45 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளதுடன், கடையின் திருத்த வேலைகளை நிறைவு செய்யும் வரையில் கடைக்கு சீல் வைக்குமாறு சுகாதார பரிசோதகருக்கு மன்று உத்தரவிட்டது. (ம-7,10,33)

## ஒட்டகப்புலத்தில்...

தீர்வு காண்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் பத்தாம் திகதி வரை விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு செல்ல வேண்டாம் என காணி உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் போது கண்ணிவெடிகள் காணப்படும் பட்சத்தில் அவற்றை உரிய நடைமுறைகளை பின்பற்றி செயலிழக்கச் செய்யப்பட்டு அகற்றப்படவுள்ளன. அதன் பின்னர் குறித்த பகுதிகள் கண்ணிவெடி அற்ற பிரதேசமாக அறிவித்தல் விடுக்கப்பட்டதும் பொதுமக்கள் எவ்வித இடையூறும் இன்றி தங்களின் காணிகளுக்குள் செல்ல முடியும். பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி இந்த தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

படுத்தப்பட்டால் அந்தப் பகுதிகளை தவிர்த்து ஏனைய காணிகளுக்குள் எதிர்வரும் பத்தாம் திகதிக்கு பின்னர் பொதுமக்கள் தங்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்ணிவெடிகள் காணப்படும் பட்சத்தில் அவற்றை உரிய நடைமுறைகளை பின்பற்றி செயலிழக்கச் செய்யப்பட்டு அகற்றப்படவுள்ளன. அதன் பின்னர் குறித்த பகுதிகள் கண்ணிவெடி அற்ற பிரதேசமாக அறிவித்தல் விடுக்கப்பட்டதும் பொதுமக்கள் எவ்வித இடையூறும் இன்றி தங்களின் காணிகளுக்குள் செல்ல முடியும். பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி இந்த தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

வசாவிளான் கிழக்கு (J/244), வசாவிளான் மேற்கு (J/245), பலாலி வடக்கு (J/254), பலாலி கிழக்கு (J/253), பலாலி தெற்கு (J/252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.83 ஏக்கர் காணி விவசாய நடவடிக்கையின் நிமிர்த்தம் அண்மையில் விடுவிக்கப்பட்டது. இராணுவ கட்டுப்பாட்டிற்குள் காணப்பட்ட இந்த பகுதிக்கு பொதுமக்கள் இலகுவாக செல்லக்கூடிய வீதிகளும் வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு அமைய விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது என்றுள்ளது. (ம-7,10,33)

## பாட...

பாடசாலை மாணவிகள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

10 முதல் 17 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவிகளே பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தனர்.

அகப்பை காம்பு மற்றும் தடியால் தாக்குவது, தலைமுடியை பிடித்து சுவருடன் தாக்குவதென, விடுதிக்கு பொறுப்பான அருட்சகோதரி கடந்த 3 வருடங்களாக தம்மை சித்திரவதை செய்வதாக மாணவிகள் கண்ணீருடன் முறையிட்டுள்ளனர்.

புதுவகையான ஆங்கில உச்சரிப்பை பேசச் சொல்லியும், ஆங்கில உச்சரிப்பு தவறு, ஆங்கில முறையாக பேசத்து, பிரார்த்தனையை முறையாக மனனம் செய்யாதது உள்ளிட்ட காரணங்களிற்காகவே அருட்சகோதரி தாக்குதல் நடத்தியதாக குறிப்பிடப்படுகிறது. அத்துடன், பாடசாலை மாணவிகளுடன் உரையாடக்கூடாத கெட்ட வார்த்தைகளையும் உபயோகித்து திட்டுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

பாடசாலையில் குறித்த விடயத்தை சொன்னபோதும் சமாளித்து போகுமாறு கூறவே அச்சம் காரணமாக 11 மாணவிகளும் நேற்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளனர்.

இதனையடுத்து அனைத்து மாணவிகளும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டனர். மாணவிகளிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில், அவர்களின் உடலில் தாக்கப்பட்ட தழும்புகள் அவதானிக்கப்பட்டுள்ளது.

குறித்த 11 மாணவிகளும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் விடுதி பொறுப்பாசிரியரை கைது செய்ய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,10,33)


மஹஜன சம்பத
திகதி 2024.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 5487
R 5 8 8 9 2 7
அத சம்பத
R 8 9 2 7
சீட்டிழுப்பு இலக்கம் 062
National Lotteries Board

தன நிதானய
திகதி -2024.05.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1517
D 27 39 45 52 D
Double Chance 16132

மெகா பவர்
திகதி 28/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1835
K 25 24 44 51 70
84483

லக்கி 7 VIP
திகதி 2024.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 313
A 0 4 1 2 5 8 A

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3729
சீட்டிழுப்பு திகதி 28.05.2024
A 08 17 26 39
A 31327
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 0796
கன்னி 13 39 44 56 கன்னி
89944 12

சசிரி SASIRI
சீட்டிழுப்பு வாரம் 482
சீட்டிழுப்பு திகதி 2024.05.28
ஊதா
27 32 45
17531
ரூ. 2,944,000/-

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.05.2024
வெற்றி வாரம் 195 வர்ணம் சிவப்பு
சுபிரி தன சம்பத
Y 2 1 3 1 9 6
C 27303
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,945,312.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2461 சீட்டிழுப்பு திகதி 28.05.2024 தினம் செவ்வாய்
08 29 40 41 B
20491
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,402,249.60

சனிதா
திகதி 2024.05.28 வெற்றி வாரம் 4622 வர்ணம் பச்சை
12 27 32 38 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,956,658.00
6 5 0 7 4

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4173 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.05.28 தினம் செவ்வாய்க்கிழமை
15 37 44 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,833,077.60
409035

கப்ருக
W 22 18 53 55 70
1637
950517
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 524,661,286.60
28.05.2024 செவ்வாய்

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 2287
சீட்டிழுப்பு திகதி 2024.05.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 115,921,700.80
அட கோட்டிபதி ADA KOTIPATHI
02 15 48 51 L
751798
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0480)

076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு

நெல்லியடி கரணவாய் பகுதியில், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியிலிருந்து 500m தூரத்தில் சுற்றுமதில், சிறிய வீடு, வெட்டுக்கிணறு மற்றும் 16 அடி பாதையுடன் கூடிய 8.75 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு - 25 இலட்சம் (1004)

077 397 5664

TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை.

A/L 2026

தொழில் நுட்பப் பிரிவு

ஆரம்பம் : 01.06.2024 (சனிக்கிழமை)
காலை 8.30 மணி

A/L 2024,2025 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (C-0475)

தொடர்புகளுக்கு : 077 017 5346


## அனைவருக்கும்...

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகமாநாட்டில் கருத்துரைக்கையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்து ள்ளதாவது நாட்டு மக்கள் வெசாக் பண்டிகையை கொண்டாடுவதற்கு சுதந்திரம் இல்லை என சஜித் பிரேமதாசவும் அநுரகுமார திசாநாயக்கவும் தெரிவித்தனர். கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் ஏற்பட்ட இருண்ட யுகத்தினை தற்போதைய ஜனாதிபதி முடிவுக்கு கொண்டு வந்துள்ளார்.

வாழ்க்கை மற்றும் எதிர்காலம் தொடர்பாக மக்கள் மகவும் அச்சத்துடன் வாழ்ந்த காலகட்டம். தொழில்வாய்ப்பு இன்மையால் நாட்டின் இளைஞர்கள் பலர் நாட்டில் இருந்து வெளியேறினர். வெசாக் பண்டிகையின் போது நாட்டில் எரிபொருள் நுகர்வும் அதிகமாக காணப்பட்டது.

இன்று இந்த நாட்டில் ஸ்திரதன்மையை ஏற்றுக்கொள்ள முடியாமையினாலேயே சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திசாநாயக்க போன்றவர்கள் இவ்வாறான கருத்துக்களை முன்வைத்துவருகின்றனர். நாட்டை பொறுப்பேற்குமாறு கூறிய போது பின்வாங்கியவர்கள் இன்று நாட்டின் சுதந்திரம் தொடர்பாக பேசுவது வேடிக்கையாக உள்ளது.

அஸ்வெசும உறுமய போன்ற மக்களுக்கான பல வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம் மிக முக்கியமாக காணி உரிமையும் வேறு பாடின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என தெரிவித்துள்ளார்.

(ம-7,10)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0479)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-0479)
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

விமலம் திருமண சேவை
யாழ்/ கனடா சர்வதேச சேவை
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். கனடா, லண்டன், சுவிஸ், பிரான்ஸ் மணமகன் / மணமகள் உள்ளன. (779)
+1437 244 6737, +1647 657 1347
(கனடா) 077 240 9276 தாயகம்

அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன
நீங்கள் அமெரிக்க அதிஸ்ட வீசா வெற்றியாளரா?
உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள். (C-0479)
எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.
ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி வீசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாரக உள்ளோம்.
V2 TRAVELS 0768226244

வேலையாள் தேவை
வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் கதைக்கப்படும். (1008)
தொடர்புகளுக்கு:
076 264 4237

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# நன்றி நவிலல்



பிறப்பு 03 . 02 . 1948

இறப்பு 29 . 04 . 2024

கடந்த 29.04.2024 இறைபதமடைந்த எமது குடும்பத்தின் குல விளக்கு

## அமரர் தனபாலசிங்கம் மணிமேகலை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்க்கு"

காலத்தால் காவியமாகிவிட்ட எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய குடும்பத்தலைவி அமரர் தனபாலசிங்கம் மணிமேகலை அவர்கள் இவ்வுலகில் இருந்து அமரத்துவம் அடைந்த போது அஞ்சலி செலுத்தியோர்க்கும் இறுதிக்கிரியைகளை ஆற்றியோர்க்கும் கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள் போன்றவற்றை வெளியிட்டு அஞ்சலித்தோர்க்கும், நேரடியாக வருகை தந்து துயர் பகிர்ந்தோருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும் இறுதி ஊர்வலத்தின் போது மயானம் வரை வந்து ஆறுதல் அளித்தோர்க்கும், மலர் வளையங்கள் வைத்தோருக்கும், சமூக ஊடகங்கள் மற்றும் தொலைபேசி வாயிலாகத் துயர் பகிர்ந்தோர்க்கும், நெருக்கடிகள் மிகுந்த நேரத்திலும் ஓடோடி வந்து எல்லா வேளைகளிலும் எல்லா உதவிகளும் செய்தவர்கட்கும், ஆறுதல் கூறியோர்க்கும் நாம் எமது காலத்தால் அழிந்திடாத நன்றிகளையும் வணக்கத்தையும் உரித்தாக்குகின்றோம்.

நன்றிகள் பலகோடி உரித்தாகட்டும்!!!!


இன்று 29.05.2024 நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அரசடி வீதி, இடும்பன் கோவில் சந்தி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (1011)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு 11 - 02 - 1945

இறப்பு 28 - 05 - 2024

## திரு. தம்பியப்பா முருகானந்தா

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தம்பியப்பா முருகானந்தா அவர்கள் நேற்று (28.05.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பியப்பா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லையா - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகேஸ்வரி (பேபியக்கா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலாம்பாள், குகானந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவளரத்தினம், சிவராஜா, ஈஸ்வரராஜா, சறோஜினிதேவி, கமலேஸ்வரி, சிவானந்தராஜா, சற்குணராஜா, பத்மினி, பத்மநாகபூஷணி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பிரம்படியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (29.05.2024) புதன்கிழமை பி.ப 01.00 மணிக்கு கொக்குவில் கனக்க மரத்தடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரம்படி,
கொக்குவில். (1010)

தகவல் : ந.ஈஸ்வரராஜா
0777 555 061

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org